# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 401

சனி, 25 யூலை, 2026 |
பக்கங்கள் 18

www.ilakku.org










# செம்மணியில் மழை அங்கியுடனான எலும்புக்கூடு: தகவல் அறிந்தால் அறிவிக்கக் கோரிக்கை




செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று முன் தினம் (23) அடையாளம் காணப்பட்ட, மழை அங்கியுடனான சிறுவனின் எலும்புக்கூடு ஒகஸ்ட் 4ஆம் திகதிக்குப் பின்னரே அகழ்ந்தெடுக்கப்படவுள்ளது. அதேவேளை, குறித்த எலும்புக்கூடு தொடர்பில் எவருக்கேனும் தகவல்கள் தெரிந்திருந்தால், அது குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: “செம்மணி மனிதப் புதைகுழிக்குள் மழை அங்கியு டன் காணப்பட்ட எலும்புக்கூடு இன்னும் அகழ்ந்தெடுக்கப்படவில்லை. அது தொடர்பில் நிபுணர்களின் ஆலோசனை களைப் பெற்ற பின்னரே, அதனை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறித்த எலும்புக்கூடு சட்ட ரீதியாகப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அனுமானம் இருப்பதனால், அது தொடர்பிலான தகவல்கள் தெரிந்தவர்கள் நீதிமன்றப் பதிவாளருக்கோ, சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்திற்கோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்திற்கோ அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இத்தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில், இந்த அகழ்வுப் பணிகள் தொடர்பிலான மேலும் சில தகவல்கள் வெளிவர வாய்ப்புள்ளது.” என்றார்.

## இலங்கைக்கு அமெரிக்காவின் புதிய வரி அறிவிப்பு



இலங்கை உட்பட்ட சுமார் 60 வர்த்தகப் பங்காளிகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா புதிய வரிகளை விதிக்கிறது. இந்த வரி விதிப்பு நேற்று (24) முதல் நடைமுறைக்கு வருகிறது.

இந்தநிலையில் புதிய வரி விதிப்பின் அடிப்படையில் இலங்கைக்கு 10வீத வரி விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பதவியேற்ற பின்னர், ஏற்படுத்திய வர்த்தகப் போரில், இது அண்மைக்கால முக்கிய நடவடிக்கையாகும்.

அவசரகால அதிகாரங்களின் கீழ் உலகளவில் விதிக்கப்பட்ட பல வரிகள் சட்டவிரோதமாக இயற்றப்பட்டவை என்று அண்மையில் அந்த நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் தற்போது புதிய வரி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுவரை, அமெரிக்க உற்பத்தித் துறையில் அதிக வேலைவாய்ப்புகளை

தொடர்ச்சி: பக்கம் 16

## “சர்வதேச நீதிப் பொறிமுறையே ஒரே தீர்வு”: யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்



“இலங்கை அரசாங்கமானது ஒரு போதும் இலங்கையில் நடந்த அநீதிக்கு தீர்வு வழங்காது என்றும் ஒரு சர்வதேச நீதிப் பொறிமுறை மூலமே இதற்கு தீர்வு கிட்டும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொருளாளர் கண்ணதாசன் சுடரோன் தெரிவித்துள்ளார்.

சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு அருகில் நேற்று (24) இடம்பெற்ற போரா ட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

“தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த உள்ளகப் பொறிமுறை மூலம் இற்றைவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை. இங்கே செயற்படுகின்ற காணாமல் ஆக்கப்பட்டோரது அலுவலகமும், அரசாங்கத்தின் நீதிப் பொறிமுறைகளும், வெறும்

தொடர்ச்சி: பக்கம் 16

# இந்தியப் போராட்டக்காரர்களுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு



மத்திய கல்வி அமைச்சரின் ராஜினாமாவை வலியுறுத்திப் போராடும் இந்தியப் போராட்டக்காரர்களுக்கு, நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன; திங்களன்று(20) நாடாளுமன்றத்தை நோக்கி நடைபெற்ற பேரணியின்போது இளைஞர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கடுமையான வன்முறை குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

இந்தியாவின் இளைஞர் தலைமையிலான ‘காக்ரோச் ஜனதா பார்ட்டி’ (CJP) இயக்கம் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டங்களுக்கு, காவல்துறை வன்முறை குறித்த காணொளிகள் இணையத்தில் பரவியதைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக ஆர்வலர்களிடமிருந்து பரவலான ஆதரவு கிடைத்துள்ளது.

இருப்பினும், போராட்டக்காரர்களில் சிலர் வன்முறையில் ஈடுபட்டதாகவும், அதனால் பல காவலர்கள் காயமடைந்ததோடு மோதல்கள் வெடித்ததாகவும் டெல்லி காவல்துறை சுட்டிக்காட்டியுள்ளது. தேசிய மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான விடைகள் கசிந்ததற்குப் பொறுப்பானவர் எனக் கருதப்படும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்றும், அதன் பின்னரே தங்கள் பிற கோரிக்கைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் போராட்டக்காரர்களும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் வலியுறுத்தியுள்ளனர்.

“கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது 152 முறை வினாத்தாள் கசிவு சம்பவங்கள் நடந்துள்ளன, ஆனால் அதற்கு யாரும் பொறுப்பேற்கவில்லை,” என்று காந்தி கூறினார். செவ்வாய்க்கிழமை மாலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின்

தொடர்ச்சி: பக்கம் 15

## சவூதி அரேபியா-அமெரிக்கா அணுசக்தி உடன்பாடு



ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தை “வரலாற்றுச் சிறப்புமிக்கது” என்று அமெரிக்க எரிசக்தித் துறை புதன்கிழமை(22) பாராட்டியதுடன், அமெரிக்க நிறுவனங்கள் அந்த இராச்சியத்திற்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை வழங்கும் என்றும் கூறியது. இந்த ஒப்பந்தம், 1954-ஆம் ஆண்டின் அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 123-இன் கீழ், 123 ஒப்பந்தம் என அறியப்படும் ஒரு உடன்படிக்கையையும், “அதனுடன் இணைந்த இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தையும்” கொண்டுள்ளது என்று அந்தத் துறை கூறியது.

“இந்த ஒப்பந்தங்கள், அமெரிக்க - சவூதி வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கும், உள்நாட்டில் செழிப்பையும் வெளிநாடுகளில் உள்ள நமது நட்பு நாடுகளுக்குப் பாதுகாப்பையும் வழங்குவதற்கும் நமது இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன,” என்று எரிசக்தித் துறை செயலாளர் கிறிஸ் ரைட் ஒரு அறிக்கையில் கூறினார்.

சில அமெரிக்க ஊடக அறிக்கைகள், இந்த ஒப்பந்தம் சவூதி அரேபியா அமெரிக்காவிலிருந்து அணு எரிபொருளை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, உள் நாட்டிலேயே யுரேனியத்தைச் செறிவூட்ட அனுமதிக்கும் என்று தெரிவித்துள்ளன. எரிசக்தித் துறையின்

தொடர்ச்சி: பக்கம் 15

## ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கு உலக கால்பந்தாட்ட அமைப்பின் தலைவர்?



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கு உலக உதைபந்தாட்ட குழுவான ஃபிஃபா (FIFA) அமைப்பின் தலைவரை நியமிக்க ட்ரம்ப் விரும்புகிறார் என்று நியூயோர்க் போஸ்ட் பத்திரிகை தெரிவித் துள்ளது.. ஜியானி இன்ஃபான்டினோ “உலகளவில் மதிக்கப்படுபவர் மற்றும் மக்களை ஒன்றிணைக்கும் சிறப்புத் திறன் கொண்டவர்” என்று அமெரிக்க அதிபர் கருதுவதாக வெள்ளை மாளிகைக்கு நெருக்கமான வட்டாரங்கள் அந்தப் பத்திரிகையிடம் தெரிவித்தன.

இன்ஃபான்டினோவும் ட்ரம்பின் நன்மதிப்பைப் பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாகவும், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் முதல் ‘அமைதிக்கான விருதை’ அவருக்கு வழங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துகீசியரான அன் டோனியோ குட்டரெஸுக்குப் பதிலாக, அடுத்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்

தொடர்ச்சி: பக்கம் 15

## ஐரோப்பாவின் ஜெட் எரிபொருள் இருப்பு ஒரு மாதத்திற்கும் குறைவாகச் சரிந்தது




ஈரான் தொடர்பான பதட்டங்கள் ஹோர் முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்கு வரத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தலாக இருப் பதால், ஐரோப்பாவிடம் ஒரு மாதத்திற்கும் குறைவான ஜெட் எரிபொருள் கையிருப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

விமான நிறுவனங்கள் இறக்கு மதியை அதிகரிப்பது, சுத்திகரிப்பு உற்பத் தியை உயர்த்துவது மற்றும் கையிருப்பைக் குறைப்பது போன்றவற்றின் மூலம் இதுவரை பெரிய பற்றாக்குறைகளைத் தவிர்த்திருந்தாலும், இறக்குமதி செய்யப்படும் விமான எரிபொருளை ஐரோப்பா பெருமளவில் சார்ந்திருப்பதால், வட அமெரிக்கா மற்றும் ஆசியாவை விட அது அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலையில் இருப்பதாகத் தொழில்துறை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சி: பக்கம் 15

 © 2026 இலக்கு இணையம்

## மலையக காணி உரிமை பற்றிய அநுர அரசின் நிலைப்பாடு என்ன?

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மலையகத் தமிழர்களின் காணி உரிமை தொடர்பில் தற்போதைய அரசு தனது உண்மையான கொள்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.



மலையக மக்களின் காணி உரிமை குறித்து பாராளுமன்றத்தில் விமர்சனத்தை முன்வைத்த அவர், “எங்கள் மக்கள் ‘தேவ தூதர்கள் வந்துவிட்டார்கள்’ என நம்பி இந்த அரசுக்கு வாக்களித்தனர் என்று சாடினார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், “ஹட்டன் பிரகடனத்தில் காணி உரிமை குறித்துக் கூறி வாக்குகளைப் பெற்ற அரசு, தற்போது அது குறித்து வாய் திறக்காமல் இருப்பது ஏன்? இது தொடர்பில் தமக்கான கொள்கையை வெளிப்படையாகவும், வார்த்தை ஜாலங்கள் இல்லாமலும் அரசு அறிவிக்க வேண்டும்.” என்றும் அவர் வலியுறுத்தினார்.

“நாம் கோருவது, களியாட்ட விடுதிகளை கட்ட அல்லது, ஆடம்பர பண்ணை வீடுகளை கட்ட ஏக்கர் கணக்கில் காணி அல்ல. தம் 200 ஆண்டுகால உழைப்பினால், வெளிநாட்டு வருமானம் கொட்டும், பெருந்தோட்டங்களை உருவாக்கிய மக்களும் அவர்களது பரம்பரையினரும், இன்று பெருந்தோட்ட பிரதேசங்களில் தோட்ட தொழிலாளர்களாகவும் வேறு தொழில் முயற்சியாளர்களாவும், வாழ்கிறார்கள். அவர்களுக்கு வதிவிட மற்றும் வாழ்வாதார காணி துண்டுகள், அவசியம் என்பதே, தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கை ஆகும்”.

“லயன் குடியிருப்புகளை தவிர்த்து, மலையக மக்கள் வாழும் காணிகள் சட்ட விரோதமானவை” என அரசாங்கம் நினைக்கிறதா? “நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளை பற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை. தமது மன்றில் முன்வைக்கப்படும், சட்ட ஆவணங்களை வைத்தே நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குகின்றன. அதேபோல், பெருந்தோட்ட நிறுவனங்கள் குண்டர் படையை வைத்து, அத்து மீறிய குடியேற்றங்கள் என மலையக மக்கள் வாழும் குடிசை குடியிருப்புகளை உடைக்கின்றன”.

“இவை பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்பதை போன்று, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அமைச்சர் சமந்த வித்தியாரத்ன முதல் அரசில் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் அனைவரும் இனிமேலும் நாடகம் நடிக்க கூடாது”.

“பெருந்தோட்டக் காணிகள் அரசுக்குச் சொந்தமானவை என்றும், நிறுவனங்கள் வெறும் குத்தகைதாரர்கள் மட்டுமே என்றும் சுட்டிக்காட்டிய அவர், தோட்டங்களில் மக்கள் மேற்கொள்ளும் கட்டுமானங்களை ‘அத்துமீறியவை’ எனக் கூறித் தடுப்பதற்கும், உடைப்பதற்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அரச நிறுவனங்களே அனுமதி வழங்குகின்றன” என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

குறிப்பாக, பெருந்தோட்ட அமைச்சின் கீழ் உள்ள கண்காணிப்புப் பிரிவு மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்தும் அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

குறிப்பாக, மலையக மக்களின் காணி உரிமை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை உடனடியாகப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும், அரசின் காணி உரிமை கொள்கை வரையறுக்கப்படும் வரை, வீடில்லா மக்கள் மேற்கொள்ளும் கட்டுமானங்களை ‘அத்துமீறியவை’ எனக் கூறி வழக்குத் தொடர்வதையோ அல்லது அவற்றை உடைத்து அகற்றுவதையோ உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

200 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நோக்கிய அந்தப் பயணத்தை, இந்த அரசு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## ஆசிரியர் தலையங்கம் | 25 யூலை, 2026

## பிரித்தானிய ஆட்சி மாற்றத்தை பிரித்தானியத் தமிழர்கள் ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்யப் பயன்படுத்த வேண்டும்

பிரித்தானியாவின் புதிய பிரதமர் மாண்பமை அன்டி பேர்ணம் அவர்களுக்கும் புதிய அமைச்சரவைக்கும் பிரித்தானியாவில் இருந்து எழும் சமூக ஊடகம் என்ற உரிமையுடன் இலக்கு ஆசிரிய குழு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதிய பிரதமர் அன்டி பேர்ணம் அவர்கள் பலஸ்தீனத் தேசிய பிரச்சினையின் சமகாலத் தன்மையை விளங்கிக் கொண்டவராக பிரித்தானியாவின் பதவி விலகிய பிரதமரின் ஆட்சிக்காலத்தில் பலஸ்தீனியர்களுக்கு உரிய அதரவு வழங்கப்படவில்லையெனக் கவலை தெரிவித்து இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியைத் தடை செய்வதின் வழி பலஸ்தீனியர்களின் தேசிய பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வுக்கு வழிகாட்ட முயற்சிக்கப் போவதாகக் கூறியுள்ளார். இனங்களின் தேசிய பிரச்சினைகளுக்கு ஏற்புடைய தீர்வு தேவையென்ற மனநிலை கொண்ட மாண்பமை அன்டி பேர்ணம் அவர்களுடனான பிரித்தானியத் தமிழர்களின் கலந்துரையாடல் மூலமாக ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சினை என்பது பிரித்தானிய காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினை என்பதையும் அதனைத் தீர்த்து வைப்பது அதனைத் தொடக்கி வைத்த பிரித்தானிய அரசின் கடமை என்பதையும் அவருக்கு விளக்க வேண்டிய காலமிது என்பதை 1983 யூலை சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பின் 43 வது ஆண்டில் அதன் வலிசுமந்து அதற்கான அனைத்துலக நீதியையும் செம்மணி ஈழத்தமிழின இனப்படுகொலைகளுக்கான அனைத்துலக நீதியையும் தாயகத்திலும் அனைத்து உலகிலும் ஈழத்தமிழர்கள் கோருகின்ற இவ்வாரத்தில் இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

இன்று பிரித்தானியா தனது பாதுகாப்புக்கு பெருந்தொகையான நிதியினைச் செலவிட வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையில் பிரித்தானியாவின் அனைத்துலகப் பாதுகாப்பு முயற்சியில் திருகோணமலைத் துறைமுகத்தின் புவியியல் இருப்பின் முக்கியத்துவத்தை ஈழத்தமிழர்கள் புதிய பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் எடுத்துரைக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

பிரித்தானியா இரண்டாம் உலகப் போர் காலத்தில் யப்பானின் குண்டுவீச்சில் இருந்து திருகோணமலையைப் பாதுகாத்த பின்னரே தனது தெற்காசிய தென்கிழக்காசிய படைநிலைகளை மறுசீரமைப்புச் செய்து மவுண்ட்பேட்டன் அவர்களால் புதுடில்லியில் இருந்த பிரித்தானிய தெற்காசிய தென்கிழக்காசிய படைத்தலைமைத்துவம் 15.04. 1944 இல் கண்டிக்கு மாற்றப்பட்டது. இதன் பின்னர் இந்துமாகடலில் பிரித்தானியக் கடற்படை சக்தி படைத்ததாக மாறியது என்பது வரலாறு. இதனை உறுதி செய்யும் வகையில் இரண்டு மாதத்துள் 06.06. 1944 இல் நோர்மண்டியில் பிரித்தானியக் கூட்டுப்படைகள் தரையிறங்கிய வரலாற்றுப் பரிணாமம் ஏற்பட்டது. பிரான்சில் தரையிறங்கி ஒரு கிழமைக்குள் 15.06. 1944 இல் பிரித்தானிய வைட்ஹோல் இலங்கைக்கு ஆணைக்குழுவொன்றை அனுப்பி சுதந்திரம் கொடுப்பதற்கான அரசியலமைப்புச் சீர்திருத்தம் செய்தலை தொடங்கி சுதந்திரம் வழங்கப்பட்டாலும் தொடர்ந்தும் திருகோணமலையில் கடற்படைத் தளத்தை வைத்திருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

இந்த பின்னணியிலேயே 01.09.1944 இலேயே திருகோணமலையில் பிரித்தானியக் கடற்படையின் மருத்துவராகக் கடமையாற்றிய தமிழ்நாடு வடஆர்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர் எஸ் பொன்னையா அவர்களால் யாழ்ப்பாண வன்னி அரசாக பிரித்தானிய காலனித்துவம் கைப்பற்றிய ஈழத்தமிழர் தாயகம் சிலோன் தமிழ் என்று அதனைப் பிரித்தானியா தனிநாடாகச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை பிரித்தானிய அரசிடம் எழுப்பப்பட்டது.

மருத்துவர் எஸ் பொன்னையா அவர்கள் “தமிழ் சிலோனுக்கும் மற்றைய சிலோனுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்னும் தலைப்பில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் காலனித்துவ அரசுக்களுக்கான செயலாளராக இருந்த ஸ்டான்லி ஒலிவர் பிரட்ரிக் ஜோர்ஜ் அவர்களுக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில் முதன் முதலில் தமிழ் சிலோனுக்கும் மற்றைய சிலோனுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஸ்பெயினுக்கும் போர்த்துக்கலுக்கும், நோர்வேக்கும் சுவீடனுக்கும், கொலண்டுக்கும் பெல்ஜியத்துக்கும், எக்குடோருக்கும் பிரேசிலுக்கும், அல்ஸ்டருக்கும் அயர்லாந்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விட மிக அதிகம் என்பதனை எடுத்து விளக்கினார்.

வரலாற்றில் இனத்துவத்தன்மையில் மொழியில் சமயநம்பிக்கையில் பண்பாட்டில் வழக்கங்களில் நடத்தைகளில் அரசியலில் நாகரிகத்தில் வாழ்வின் இலட்சியங்களில் சிலோனில் வாழும் மற்றவர்களிடமிருந்து வேறுபாடுகளைக் கொண்டவர்களாகத் தமிழ் சிலோனில் வாழ்பவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். சில தன்னல நோக்குள்ள அரசியல்வாதிகள் தமிழ் சிலோனுக்கும் ஏனைய சிலோனுக்கும் இடையில் செயற்கையான ஒட்டுக்கள் போட முயல்கின்றனர். ஆனால் தமிழ் சிலோன் அதனளவில் தனியான அலகு. தமிழ் சிலோனைத் தனிநாடாகச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். அப்பொழுது தமிழ் சிலோன் இந்தியாவுக்கும் மற்றைய சிலோனுக்குமான இணைப்புப்பாலமாகவும் பரிணாமம் பெறும். இது நடைபெறாவிட்டால் தமிழர்கள் எத்தகைய இனஅழிப்புக்களை பண்பாட்டு அழிப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும் என்பதையும் மிகத்தெளிவாக விளக்கி எச்சரிக்கவும் செய்திருந்தார்.

ஆயினும் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியாளர்கள் இதற்கு செவிசாய்க்காத நிலையில் தான் 29.10.1944இல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஜிஜி பொன்னம்பலம் அவர்களால் அமைக்கப்பட்டது. இதன் மூலமாகவே பிரித்தானியா கொண்டு வரவிருந்த அரசியலமைப்பு மாற்றத்தை சட்டரீதியாக சந்திப்பதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டது. தமிழ் காங்கிரஸ் அமைக்கப்பட்டு சில கிழமைகளில் 22.12.1944இல் சோல்பரிப் பிரபு இலங்கையை வந்தடைந்தார். சோல்பரி அரசியலமைப்பே ஈழத்தமிழர் இறைமையை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் உள்ளடக்கியது. இவ்வாறு 1833இல் பிரித்தானிய காலனித்துவம் செயற்கையாக உருவாக்கிய சிலோன் என்ற நாட்டுக்கும் சிலனிஸ் என்ற செயற்கையான தேசியத்துக்கும் 04.02.1948இல் சுதந்திரம் வழங்கியது. ஆயினும் சோல்பரி அரசியலமைப்பின் 29(2) பிரிவு மதத்துக்கோ அல்லது இனத்துக்கோ எதிரான சட்டங்கள் சிலோன் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டால் பிரித்தானிய பிரிவிக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்ய அனுமதித்து தொடர்ந்தும் மாண்பமை 2வது எலிசபெத் மகாராணி அவர்களே சிலோனின் அரசத் தலைவியாகவும் தொடர அனுமதிக்கப்பட்டது.

இந்த அரசியலமைப்புச்சட்டத்தைப் பயன்படுத்தியே கோடீஸ்வரன் வழக்கில் பிரித்தானியப் பிரிவிக் கவுன்சில் இடம் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக மேன் முறையீடு செய்த பொழுது பிரித்தானிய பிரிவிக் கவுன்சில் வழங்கிய தீர்ப்புக்கு கட்டுப்பட மறுத்து 22.05. 1972 இல் சிங்கள பௌத்த குடியரசை சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக்கட்சியும் இடதுசாரிக் கூட்டணியினரும் ஏற்படுத்தினர். 1934 இல் ஜி. ஜி. பொன்னம்பலம் ஈழத்து அரசியலில் தலைமைத்துவத்தை தொடங்கிய காலம் முதல் 1972 வரையான 38 ஆண்டு கால அவரின் அரசியல் செயற்பாடுகளும் 1944 முதல் இக்காலம் வரையான 28 ஆண்டு கால அகில இலங்கைத் தமிழக் காங்கிரசின் அரசியல் வரலாறும் மீள்வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டாலே இக்காலத்து ஈழத்தமிழரின் இறைமையின் இருப்பின் சட்டத்தன்மை தெளிவாகும். அவ்வாறே 1949 முதல் 1976 வரை தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில் ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமைக்கட்சியாக விளங்கிய தமிழரசுக்கட்சியின் வரலாறும் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டாலே 1972ம் ஆண்டுக்குப் பின்னரான ஈழத் தமிழரின் அரசற்ற தேசஇன நிலையில் அவர்களின் இறைமையை மீளுறுதி செய்வதற்கான மக்கள் இறைமை குறித்த அனைத்துலக சட்ட நிலை தெளிவாகும்.

இந்த இறைமையை மீளுறுதி செய்யும் நடைமுறையை 22.05 1972 க்குப் பின்னர் 06.02. 1975ம் திகதிய காங்கேசன் துறை அடையாளக் குடியொப்ப தமிழீழத்துக்கான மக்களாணையின் வழி 14.05. 1976ம் திகதிய வட்டுக்கோட்டைத் தீர் மானத்தை விளக்கிச் சிறிலங்கா தேசிய அரச சபையில் தந்தை செல்வநாயகம் அவர்கள் 19.11. 1976 இல் ஈழத்தமிழரின் தன்னாட்சிப் பிரகடனமாகப் பிரகடனப்படுத்திச் சிங்கள பௌத்த சிறிலங்காப் பாராளமன்ற அரசியலமைப்புக்கு ஈழத்தமிழர்களின் இறைமையை ஆட்சிக்குட்படுத்தும் அரசியலமைப்புச் சட்டத்தன்மையில்லையென உலகிற்குத் தெளிவாக்கிப் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.

1972 இல் பிரித்தானிய காலனித்துவ அரசிடமிருந்து ஈழத்தமிழரிடமே மீண்டு விட்ட மக்கள் இறைமையின் அடிப் படையில் ஈழத்தமிழரின் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையினைக் கொண்டு அவர்கள் தங்களுக்கான பாதுகாப்பினை அமைதியுடனும் வளர்ச்சியுடனும் கூடிய தன்னாட்சியை அமைக்கப் போவதாக அறிவித்தார். 21.07. 1977 ம் திகதிய சிறிலங்காத் தேர்தலை ஈழத்தமிழர்களின் தாயகமான தமிழீழத்தில் மீளவும் இறைமையுள்ள மக்களாக தன்னாட்சியை உருவாக்குவதற்கான குடியொப்பமாக தமிழர் விடுதலைக்கூட்டணியினர் முன்னிறுத்தி 24 தொகுதிகளில் போட்டியிட்டு 18 தொகுதிகளில் வெற்றி பெற்றதன் வழி ஈழத்தமிழரின் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பலத்துடன் ஈழத்தமிழர் தன்னாட்சியை அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய சனநாயகவழிகளில் அமைப்பதை சிறிலங்கா ஏற்காவிட்டால் வேறு எந்த வழியிலும் அடைவோம் என உலகிற்கு அறிவித்தனர்.

இந்த ஈழத்தமிழரின் மக்களாணையின் அடிப்படையிலேயே 1978 முதல் 2009 வரை இலங்கைத் தீவில் இரு அரசுக்கள் என்ற உண்மைநிலையை உலகிற்கு உள்ளக தன்னாட்சி உரிமையைச் (Internal Self- determination) செயல்படுத்தி தெளிவாக்கிய ஈழத்தமிழரின் நடைமுறையரசு தேசியத் தலைமையுடனும் சீருடை அணிந்த முப்படைகள் நிர்வாகம் என்பவற்றுடன் 31 ஆண்டுகள் நடைமுறையரசை (De facto) முன்னெடுத்து சட்டவாட்சிக்கான (De-jure) உலகின் அங்கீகாரத்தை வெளியக தன்னாட்சி உரிமையின் (External Self- determination) அடிப்படையில் கோரிநின்ற நிலையில் 18.05.2009இல் சிறிலங்கா 146000 ஈழத்தமிழரைத் தேசமாகவே இனப்படுகொலை செய்து மீளவும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிச் சிறிலங்காகப் பாராளுமன்றத்தின் கொடுங்கோன்மை ஆட்சியை படைபலத்தால் ஈழத்தமிழரின் அரசியல் பணிவைப் பெறும் பெறும் வகையில் கடந்த 17 ஆண்டுகளாகத் தொடர்கின்றனர்.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் அவர்களின் பிரிக்கவியலாத தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்கள் தமக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் பெற இயலாதவாறு பிரித்தானிய காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை தொடர்வதைப் பிரித்தானியப் பிரதமர் மாண்பமை அன்டி பேர்ணம் அவர்களுக்கும் அவரது அமைச்சரவைக்கும் எடுத்துரைக்கும் உரையாடல்களை வேகப்படுத்தி இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதியை நிறுத்திப் பலஸ்தீனர்களின் தேசிய பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்க பிரித்தானியாவின் பிரதமர் அன்டி பேர்ணம் அவர்கள் முயற்சிப்பது போல சிறிலங்காவுக்கும் ஏற்புடைய அழுத்தங்களை மேற்கொண்டு ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதன் வழி அவர்களுக்கும் பிரித்தானியர்களுக்கும் இடையிலான உறவினை வளர்த்து அவர்களின் திருகோணமலையில் பிரித்தானியா தனது முதலீடுகளை மேற்கொண்டு பிரித்தானியாவின் பாதுகாப்பையும் உச்சப்படுத்த வேண்டும் என்பதை பிரித்தானியத் தமிழர்கள் தங்கள் உரையாடல்கள் வழி அடைய வேண்டுமென்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

**ஆசிரியர்**



# திசைதிருப்பும் திடீர் விஜயம்!

வடக்கு, கிழக்கு நிலப்பரப்பு முழுவதும் பரந்து காணப்படும் மனிதப்புதைகுழிகள் வெறும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சித் தளங்கள் அல்ல. அவை தமிழ் இனப்படுகொலையின் பேரழிவையும், தசாப்த காலமாக தொடரும் கட்டமைக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்படுதல்களையும் சாட்சியப்படுத்தும் குற்றவியல் களங்களாகும்.



யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் 2025 பெப்ரவரி முதல் மீண்டும் முன்னெடுக்கப்படும் அகழ் வாராய்ச்சிப் பணிகளில் இதுவரை 471க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு, அதில் 455 எலும்புக்கூடுகள் நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றுள் பெரும்பாலான எலும்புக்கூடுகள் உடைகளில்லாத நிலையிலும், குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளின் எச்சங்களாகவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தோண்டி எடுக்கப்பட்ட மனித எச்சங்களில் பத்தில் ஒரு பங்கு சிறார்களின் எலும்புக்கூடுகள் என்பது முதற்கட்ட தடயவியல் ஆய்வுகளில் தெரியவந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களுடன் மீட்கப்பட்ட பாடசாலைப் பைகள், சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள், பால் போத்தல்கள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் ஆகியவை கொலையுண்டவர்களின் சிவிலியன் தன்மையை ஐயமற வெளிப்படுத்துகின்றன.



இத்தகைய பேரதிர்ச்சி தரும் சான்றுகள் தொடர்ந்து வெளிவந்தபோதிலும், இலங்கை அரசானது சர்வதேச தடயவியல் நிபுணர்களின் பங்கேற்பையோ, வெளிப்படையான மரபனு பரிசோதனை முறைகளையோ அல்லது பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நம்பக்கூடிய ஒரு பொறிமுறையையோ முற்றாக நிராகரித்தே வருகின்றது.

இத்தகைய பின்னணியில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கார்மென் மொரேனோ தலைமையில் ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்கள் அடங்கிய உயர்மட்டத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தின் பூர்வாங்க அனுமதியுடன் செம்மணி மனிதப்புதைகுழி அகழாய்வுத் தளத்திற்கு அவசர விஜயம் மேற்கொண்டு, அங்குள்ள நீதிபதி, சட்டவைத்திய அதிகாரி மற்றும் வழக்கறிஞர்களுடன் கலந்துரையாடினர்.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரின் இந்த வருகைக்கு சமாந்தரமாக, வடக்கு கிழக்கு மாகாண காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து கண்டி-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

செம்மணி உட்பட இலங்கையில் கண்டறியப்பட்ட அனைத்து மனிதப்புதைகுழிகளுக்கும் சர்வதேச நீதிப் பொறிமுறையூடாக சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மீள நிகழாமைக்கான உத்தரவாதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், இலங்கையின் உள்நாட்டு நீதிப் பொறிமுறையை முற்றிலும் நிராகரிப்பதாகவும் பிரகடனம் செய்தனர்.

போராட்ட களத்தில் நிலவிய கடுமையான பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்பையும் அச்சுறுத்தல்களையும் தாண்டி, பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் வட, கிழக்கு மாகாண காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத் தலைவர் கனகரஞ்சினி தலைமையிலான பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவை சந்தித்து 12 பக்கங்களைக் கொண்ட சர்வதேச மனுவை கையளித்தனர்.



'நாங்கள் தந்த மகஜர் வெறும் காகிதம் அல்ல. எங்களுடைய உயிரையே உங்களுடைய கைகளில் ஒப்படைத்திருக்கின்றோம்' என்று பாதிக்கப்பட்ட தாய்மார்கள் உருக்கமாகத் தெரிவித்தபோதிலும், தூதுக்குழுவினரோ 'நீங்கள் தந்தது வெறும் காகிதம் அல்ல என்பதை அறிவோம், ஆனால் எம்மால் உங்களுக்கு எந்த உறுதிமொழியும் தர முடியாது. உங்களின் துன்ப துயரங்களை ஐ.நா. சபையிலும் மனித உரிமைகளைப் பேணும் நாடுகளிடமும் வேண்டுமானால் எடுத்துக்கூறுவோம்' எனக் கூறி தங்களது பொறுப்பை சாதுரியமாகக் கைவிரித்தனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையை மட்டுமே உறுதியாகக் கோருவதற்குப் பின்னால் நியாயமான வரலாற்று காரணங்கள் உள்ளன. ஏனெனில் இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் நீதிக்காகப் போராடிய 450 க்கும் மேற்பட்ட பெற்றோர் பலனின்றி மரணித்துப் போயுள்ளனர்.

கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட பல உள்நாட்டு ஆணைக்குழுக்களும், அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட 'காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம்' மற்றும் 'இழப்பீடுகளுக்கான அலுவலகம்' போன்ற கட்டமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறத் தவறியதோடு, குற்றவாளிகளைப் பாதுகாக்கும் கேடயமாகவே செயற்பட்டு வருகின்றன.

இதனாலேயே தமிழ் மக்கள் செம்மணி உட்பட அனைத்துப் புதைகுழிகளுக்கும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அல்லது சுயாதீன சர்வதேச விசாரணை

**விதுரன்**

பொறிமுறை மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடு ஒன்றில் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய 'மரபனு தரவு வங்கி' உருவாக்கப்பட்டு புலம்பெயர் தமிழ் மக்களையும் உள்ளடக்கிய வகையில் மாதிரிகள் ஒப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும், செயற்கைக்கோள் புகைப்படங்கள் மற்றும் நிலவரைபட நுட்பங்களைப் பயன்படுத்தி படுகொலைத் தளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோருகின்றனர்.



இருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த திடீர் விஜயமானது பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான போராட்டத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசைதிருப்பும் நாடகமாகவே பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் ஏற்றுமதி வரிச்சலுகையைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச அளவில் எழும் அழுத்தங்களைக் குறைப்பதற்குமான கருவியாகவே இந்த விஜயத்தை கருதவேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் முற்றாக நிரா கரித்த 'காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலக' அதிகாரிகளையும், அரசு சார்ந்த கட்டமைப்புகளையும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் செம்மணி விஜயத்துக்கு பின்னர் சந்தித்து உரையாடியிருப்பது, உறவுகளைப் பறிகொடுத்த மக்கள் நிராகரித்த அதே பலனற்ற உள்ளகக் கட்டமைப்புக்குள் அவர்களை மீண்டும் திணிப்பதற்கான சூழ்ச்சியையே காட்டுகிறது.

மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடரும் ஒரு நாட்டிற்கு, பொருளாதாரச் சலுகைகளை நிபந்தனையின்றி நீடிப்பதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் குற்றமிழைத்த அரசுக்குத் துணைபோகிறது என்பது பகிரங்கமாகின்றது.

அதேவேளை, வடக்கு, கிழக்கு முழுவதும் மக்கள் தன்னிச்சையாக திரண்டு போராடியபோதிலும், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைந்த பிரதிநிதித்துவமும் தெளிவான அரசியல் மூலோபாயமும் சர்வதேச தூதுக் குழுவின் முன் வலுவாக வைக்கப்படாமல் தமிழர் தாயகம் ஒரு தேசமாக எழுந்து நின்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கத் தவறியமையும் இத்தகைய சர்வதேச பிரதிநிதிகள் மிக இலகுவாக கடந்து செல்வதற்கு வழிவகுத்துள்ளது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் மனிதப் புதைகுழிகள் என்பவை போர்க்குற்றங்கள்,மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கான சாட்சியங்களாகும். செம்மணியிலும் ஏனைய இடங்களிலும் தோண்டத் தோண்ட வெளிவரும் எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் மௌன சாட்சிகளாக இருக்கும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் 'உறுதிமொழி தர முடியாது' என்ற பதில் சர்வதேச சமூகத்தின்

தொடர்ச்சி: பக்கம் 16




**பா.அரியநேத்திரன்**

யாழ்ப்பாணம் செம்மணியில் இப்போது 471க்கு மேல் , தமிழர்களின் எலும்பு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள இந்த தமிழினப்படுகொலைகள் நடந்த ஆண்டு 1996 தொடக்கம் 1999 காலப்பகுதி என கருதப்படுகிறது.

இந்த காலப்பகுதியில் 1994,நவம்பர்,12, தொடக்கம், 2005, நவம்பர்,19, வரை தொடர்ச்சியாக இருதடவை ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர் சந்திரிக்கா. பிரதமராக இருந்தவர் அவருடைய தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இவர்களுடைய ஆட்சியில்தான் 1996,செப்டம்பர்,07 அன்று யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிரிஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது குடும்பத்தினரான கிருஷாந்தியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59) மாணவியின் சகோதரனும், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மாணவனான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35 ) ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்த வேளை அவர்கள் அனைவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர்.

அந்த காலப்பகுதியில் இவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதன் தொடர்சியாக யாழ்ப்பாணத்தில் தமிழின அழிப்பு படுகொலைகள் பல கிராமங்களை இராணுவம் சுற்றிவளைப்பு செய்து குடும்பம் குடும்பமாக குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் ஈவிரக்க மின்றி படுகொலை செய்தும் உயிருடனும் செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளனர். என்பதையே தற்போதைய எலும்புக்கூடுகள் சாட்சியங்களாக நிரூபிக்கின்றன.



இந்த இனப்படுகொலை தாயும், மகளும் அதாவது சந்திரிகா, ஸ்ரீமாவோ ஆட்சியில் நடந்த இனப்படுகொலைகளாகும். அந்த படுகொலைகளில் சில தமிழர்கள் உயிருடன் புதைக்கப்பட்டனர் என்பதற்கு சான்றாக படுகுழியில் ஒரு தமிழர் காலை மடித்து இருந்த நிலையில் அந்த எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த கொடுர இனப்படுகொலை அரங்கேறும்போது ஆட்சியில் ஜனாதிபதி யாக சந்திரிகாவும், பிரதமராக சந்திரிகாவின் தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பு வகித்தார். அவருடன் இணைந்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக அனுருத்த ரத்வத்த செயல்பட்டார்.

இதில் முக்கிய பாத்திரமான வெளிவிவகார அமைச்சராக லக்ஷ்மன் கதிர்காமர் இருந்தார். சந்திரிகாவின் இனப்படுகொலைகளை மறுதலித்தும், மனித உரிமை மீறல்களை மறுதலித்தும், தமிழர்களுடை அரசியல் தீர்வை நிராகரித்தும் வெளிவிவகார அமைச்சராக ஒரு தமிழனை பயன்படுத்தி சந்திரிகா ஆட்சி வெற்றிகண்டது என்பது உண்மை.

1994, சந்திரிகா ஆட்சிக்கு பக்கபலமாக 07, ஆசனங்களை பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முழுமையான ஆதரவை வழங்கியது. அவர்களில் எம். எச். எம். அஷ்ரப் கப்பல்துறை, துறைமுக வளர்ச்சி, புனரமைப்பு மற்றும் புனருத்தாரண அமைச்சராகவும், றவூ ஹக்கீம் பாராளுமன்ற குழுக்களின் தலைவராகவும், ஹிஷ்புல்லா பிரதி அமைச்சராகவும் இருந்தனர்.

ஈபிடீபி டக்லஸ் தேவானந்தா தலைமையில் சுயேட்சைகுழுவில் 09, பாராளுமன்ற உறுப்பினர்கள் நிபந்தனை ஆதரவு வழங்கியதுடன் தமிழ் ஆயுத ஒட்டுக் குழுவாகவும் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கினர்.



மலையகத்தை சேர்ந்த சௌமியமூர்த்தி தொண்டமான் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) கால்நடை வள அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகவும், பெ.சந்திரசேகரன் - மலையக மக்கள் முன்னணி தலைவர், பிரதி அமைச்சராகவும் இருந்தனர். மலையகத் தலைவர்களான இவர்கள் ஆட்சியில் இருந்த போதும் கிரிஷாந்தி படுகொலை, செம்மணிப்படுகொலைகளை கண்டித்தனர்.

ஆனால் ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஸ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமே இதனை கண்டிக்கவும் இல்லை வாய் திறக்கவும் இல்லை. ஈபிடிபி டக்லஸ் தேவானந்தா 09, ஆசனங்களுடன் நிபந்தனையற்ற ஆதரவுடன் இனப்படுகொலைக்கு துணை போனார்கள்.

1994, பொதுத்தேர்தலை பகிஷ்கரிக்குமாறு விடுதலைப்புலிகள் கட்டளை இட்டதால் தமிழர் விடுதலை கூட்டணி வடமாகாணத்தில் போட்டியிடவில்லை, கிழக்கு மாகாணத்தில் மட்டும் தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிட்டமையால் மட்டக்களப்பில் மூவரும், திருகோணமலையில் ஒருவருமாக நால்வர் தெரிவானார்கள். வாக்குகள் அடிப்படையில் தமிழர் விடுதலை கூட்டணிக்கு தேசிய பட்டியலில் ஒரு ஆசனம் கிடைத்தது அந்த ஆசனமே நீலன் திருச்செல்வத்துக்கு வழங்கப்பட்டது.



தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜோசப் பரராஜசிங்கம், பொன்னம்பலம் செல்வராசா, கிருஷ்ண பிள்ளை துரைராசசிங்கம் ஆகியோரும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து அருணாசலம் தங்கத்துரை, (அவர் கரும்புலி தினமான 1997,யூலை,05 திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நிழ்வொன்றில் கலந்து கொண்ட சமயம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். அந்த வெற்றிடத்திற்கு விருப்பு வாக்கு அடிப்படையில் அடுத்த நிலை இரா சம்பந்தன் நியமனம் பெற்றார்) தேசியபட்டியலில் யாழ்ப்பாணம் நீலன் திருச்செல்வத்துக்கு வழங்கப்பட்டது. (அவர் 1999, யூலை,29, ல் தற்கொலை குண்டுதாரியால் கொல்லப்பட்டார். அந்த வெற்றிடத்திற்கு மாவை சேனாதிராசா நியமனமானார்.

1996,ல் செம்மணியில் மாணவி கிரிசாந்தி படுகொலை இடம்பெற்ற போதும் அதனை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் அத்துமீறல்கள், சுற்றிவளைப்புகள், இனப்படுகொலைகள் என அரங்கேறிய காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் வன்மையாகக் கண்டித்து குரல் கொடுத்ததனர். இப்படுகொலைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரிய விசாரணை நடத்தவும், பாதுகாப்புப் படையினரின் அடக்குமுறைகளைக் கட்டுப்படுத்தவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

1997,ம் ஆண்டில் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற மனிதப் படுகுழிகள் மற்றும் காணாமல் போனோர் விவகாரத்தை நாடாளுமன்றத்திலும் வெளிநாடுகளுக்கும் கொண்டு சென்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் குரல் கொடுத்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் இரகசியப் புதைகுழிகள் குறித்த தகவல்களை அப்போதைய நாடாளுமன்றத்தில் அவர் கேள்வி எழுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். சர்வதேச நாடுகளிலும் செம்மணியில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள் குறித்து சர்வதேச ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தினார்.



ஆனால் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கிரிஷாந்தி குமாரசாமி மற்றும் செம்மணி படுகொலைகள் தொடர்பான நீதி விசாரணைகள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் சட்டத்தின்படி சுதந்திரமாக நடப்பதாகவும், குற்றங்களை இழைத்தவர்கள் எந்தத் தரப்பினராக இருந்தாலும் தப்ப முடியாது இலங்கை நீதித்துறை தனது கடமையைச் சரியாகச் செய்கிறது. மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிப்படையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என வழமையான வாய்பாடுகளை சர்வதேச சமூகத்திற்கும் ஊடகங்களுக்கும் தெரிவித்ததுடன் பல சர்வதே நாடுகளிலும் வெளிநாட்டு தூதரகங்களிலும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ஸ்ரீமாவோ ஆட்சியை காப்பாற்றி இனப்படுகொலைகளை மறுதலிக்கும் செயல்பாடுகளையே செய்தார்.

1994, ல் லக்ஷ்மன் கதிர்காமர் ஆரம்பித்த துரோகச் செயல்கள் 2005, வரை 11, வருடங்களாக தொடர்ந்தன என்பதே வரலாறு. பல அழுத்தம் காரணமாக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் / ட்ரயல்-அட்-பார் அமர்வு இடம்பெற்று குற்றவாளிகளுக்கு 1998,யூலை,07, ல் மரண தண்டனை விதித்தது. குற்றவாளிகளான முன்னாள் இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ச உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**தொடர்ச்சி: பக்கம் 16**




## தீபச்செல்வன்

ஈழத் தமிழ் மக்களின் கூட்டு நினைவில் என்றென்றும் ஆறாத வடுவாகப் பதிந்திருப்பது கறுப்பு ஜூலை. இலங்கை அரசு அதனை "கலவரம்" என்று அழைத்து வரலாற்றை மறைக்க முயன்றாலும், அது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலையாகவே தமிழ் மக்களின் நினைவில் வாழ்கிறது. ஒரு இனத்தின் உயிர்களை மட்டுமல்லாது, அவர்களின் கல்வி, பொருளாதாரம், தொழில் வளம், கலாசாரம், இனப்பரம்பல், சமூக இருப்பு என வாழ்வியலின் முழுமையையும் சிதைத்தழிக்க மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவு வன்முறையாக அது அமைந்தது. கறுப்பு ஜூலை, ஈழத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றை மட்டுமல்ல, அவர்களின் எதிர்காலப் பாதையையும் மாற்றிய திருப்பு முனையாக மாறியது.



### திருநெல்வேலித் தாக்குதல்

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் நாள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் இலங்கை இராணுவ அணியொன்றுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி செல்லக்கிளி அம்மானும் வீரமரணம் அடைந்தார். இந்தச் சம்பவத்தை உடனடியாகப் பயன்படுத்திய அன்றைய அரசு, கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை கொழும்புக்குக் கொண்டு சென்று, தமிழர்களுக்கு எதிரான இனவெறியைத் தூண்டும் சூழலை உருவாக்கியது. "தமிழர்கள் சிங்களவர்களைக் கொன்று வருகின்றனர்" என்ற பொய்ப் பிரசாரம் நாடெங்கும் பரப்பப்பட்டதையடுத்து, தமிழர்கள்மீது திட்டமிட்ட தாக்குதல்கள் கட்டவிழ்க்கப்பட்டன.

கொழும்பு வீதிகளில் தமிழர்கள் அடையாளம் கண்டு தாக்கப்பட்டார்கள். வீடுகள், கடைகள், தொழில் நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. பலர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார்கள். குடும்பங்கள் சிதறின. பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் என எவருக்கும் பாதுகாப்பு இருக்கவில்லை. ஐந்து நாட்களுக்கும் மேலாக நீடித்த வன்முறையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்; எண்ணற்றோர் காயமடைந்தனர்; இலட்சக்கணக்கானோர் அகதிகளாக மாறினர்.

### கொடூரப் படுகொலைகள்

அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கிலும் இராணுவ வன்முறைகள் தீவிரமடைந்தன. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அரசின் பாதுகாப்பில் இருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்டோரின் படுகொலை, தமிழ் அரசியல் கைதிகளுக்குக்கூட இந்த நாட்டில் உயிர் பாதுகாப்பு இல்லை என்பதை உலகிற்கு உணர்த்தியது.

கறுப்பு ஜூலை, குருதியால் மட்டுமல்ல, நிர்வாணத்தாலும் நினைவுகூரப்படுகிறது. தமிழர்கள் பலர் ஆடைகள் களையப்பட்டு வீதிகளில் இழுத்துச் செல்லப் பட்டனர். பெண்களும் ஆண்களும் மனிதக் கண்ணியத்தை இழிவுபடுத்தும் வகையில் அவமதிக்கப்பட்டனர். உயிருடன் எரித்துக் கொல்லுதல், கொடூரமான தாக்குதல்கள், நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்துதல் என மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாகக் கருதப்படும் வன்முறைகள் வெளிப்படையாக நிகழ்த்தப்பட்டன. இத்தகைய பரவலான தாக்குதல்கள் சில வன்முறைக் குழுக்களால் மட்டும் மேற்கொள்ள முடியாதவை; அரசின் அனுமதியும் அரசியல் பாதுகாப்பும் இல்லாமல் அவை நிகழ்ந்திருக்க முடியாது.

### கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு

1983 இனப்படுகொலை தனித்து நிகழ்ந்த சம்பவமல்ல. அதற்கு முன்னரே 1958இல் தமிழர்கள்மீது இனவன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டிருந்தன. அப்போது ஆயுதப் போராட்டம் உருவாகியிருக்கவில்லை. 1956இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அது நாட்டைப் பிளக்கும் என்று சிங்கள முற்போக்கு அரசியல்வாதிகளே எச்சரித்திருந்தனர். தமிழர்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதும், அறவழிப் போராட்டங்கள் அடக்கப்பட்டதும், 1981இல் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டதும், ஒரே இனவெறி அரசியலின் தொடர்ச்சியான வெளிப்பாடுகளாகும். அந்த ஒடுக்குமுறைகளே தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தள்ளின.



கறுப்பு ஜூலைக்கு சில நாட்களுக்கு முன்னர், அன்றைய அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தன, வடக்குத் தமிழர்களின் கருத்தைப் பற்றித் தனக்குக் கவலையில்லை என்றும், வடக்கில் அழுத்தம் அதிகரித்தால் சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்றும் வெளிநாட்டு ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார். அந்தப் பேச்சுக்குப் பின்னர் நாடு முழுவதும் தமிழர்கள்மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறை, கறுப்பு ஜூலை தன்னிச்சையான கலவரமல்ல; முன்கூட்டியே திட்டமிடப்பட்ட அரசியல் இனப்படுகொலை என்பதற்கான வலுவான சான்றாக அமைந்தது. அன்றைய அரசில் அமைச்சராக இருந்த சிறில் மத்யூ உள்ளிட்டோர் இந்த வன்முறையை ஒழுங்கமைத்ததாக அக்கால அரசியல் வட்டாரங்களிலும் பின்னர் பல ஆய்வுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

### படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலை என்பது கறுப்பு ஜூலையின் இன்னொரு கோர முகமாக அமைந்தது. 1981ஆம் ஆண்டு இன விடுதலைச் செயற்பாடுகளுக்காக கைது செய்யப்பட்ட குட்டிமணிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, நீதிபதி அவரது இறுதி ஆசை என்ன எனக் கேட்டார். அதற்கு குட்டிமணி, "நான் தூக்கில் இறந்த பின்பு எனது இரண்டு கண்களையும் கண்பார்வையற்ற ஒரு தமிழருக்கு தானமாக வழங்க வேண்டும். என்னால் பார்க்க முடியாமல் போகும் ஈழத்தை எனது கண்களாவது பார்க்கட்டும்" என்று கூறினார். ஈழத் தமிழ் மக்களின் விடுதலைத் தாகத்தையும், எந்த நிலையிலும் அந்த இலட்சியத்தை கைவிடப் போவதில்லை என்ற உறுதியையும் வெளிப்படுத்திய வரலாற்றுச் சொற்களாக அவை பதிவாகின. அதேபோல், தங்கதுரை தனது இறுதி உரையில் ஈழத் தமிழ் மக்கள் ஒருபோதும் சிங்கள அரசின் கீழ் இயல்பாக இணைந்த மக்கள் அல்ல என்றும், அவர்கள்மீது பிரிவினைக் குற்றச்சாட்டைச் சுமத்த எந்த நீதியும் இல்லை என்றும் வலியுறுத்தினார்.



இலங்கை நீதித்துறையின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த அவர், அது தமிழ் இனத்தின் உரிமைகளை மறுக்கும் அரசியல் அமைப்பின் கருவியாகவே செயற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். கறுப்பு ஜூலையின் இனவெறித் தீ வெலிக்கடைச் சிறைச்சாலையின் கதவுகளையும் உடைத்து உள்நுழைந்தபோது, கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன்வந்த கும்பல்கள் தமிழ் அரசியல் கைதிகளை கொடூரமாகத் தாக்கினர். குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உள்ளிட்ட தமிழ் அரசியல் கைதிகள் அரசின் பாதுகாப்பில் இருந்த சிறைக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்டனர். குட்டிமணியின் இறுதி ஆசையை அறிந்திருந்த இனவாதிகள், அவரது கண்களைப் பற்றிய அவமதிப்புகளுடன் அவரது உடலைக் கொடுமைப்படுத்தியதாகவும் சாட்சியங்கள் பதிவு செய்துள்ளன. நீதியின் பாதுகாப்புக்குள் இருந்தவர்கள்கூட பாதுகாக்கப்படாத அந்த நிகழ்வு, கறுப்பு ஜூலை ஒரு கட்டுப்பாடற்ற வன்முறை அல்ல; தமிழ் மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட திட்டமிட்ட இனவெறி அரசியலின் வெளிப்பாடு என்பதற்கான மிகக் கொடூரமான சாட்சியாக அமைந்தது.

### எழுந்தது தமிழீழக் கோரிக்கை

குறுகியதொரு காலப் பகுதியில் இவ்வாறு பெரும் வன்முறை நடக்கிறது என்றால் அதற்குப் பின்னால் அரசின் திட்டம் இருந்திருக்கிறது என்பதையும் உணரலாம். ஏற்கனவே இனவழிப்புக்கள் நடந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக் கொண்டு 83 ஜூலை இனப்படுகொலையை நடாத்தியுள்ளார்கள். சிறில் மத்யூ போன்றவர்கள் குறுகிய குழுவில் வன்முறையாக இல்லாமல் சிங்கள பொதுமக்களின் பற்கேற்புடன் நடாத்த நினைத்தார்கள். அதன் ஊடாக ஈழ மக்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது, தனிநாடு கோரக் கூடாது, தமது உரிமைகளை கேட்கக்கூடாது என்ற எச்சரிக்கைகளை விடுக்க நினைத்தார்கள்.


கறுப்பு ஜூலையின் இன்னொரு விளைவு, தென்னிலங்கையிலும் மலையகத்திலும் வாழ்ந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் சொந்த வீடுகளிலிருந்து விரட்டப்பட்டு வடக்கு, கிழக்கை நோக்கி இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டதுதான். தென்னிலங்கையில் சிந்திய குருதியும், அனுபவித்த நிர்வாண அவமானங்களும், எரிக்கப்பட்ட வீடுகளும், இழந்த வாழ்வாதாரங்களும், தமிழ்

தொடர்ச்சி: பக்கம் 16




இலங்கையில் நிலவும் கடுமையான வெப்பமான காலநிலையானது பல்வேறு தாக்கங்களை செலுத்தி வருகின்றது.குறிப்பாக நிலவும் இந்த வெப்பமான காலநிலையினால் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலைமையினை எதிர்கொள்வதை காணமுடிகின்றது.

காலத்திற்கு காலம் இவ்வாறான வறட்சி நிலைமைகள் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கான ஏதுவான நிலைமைகள் குறைவான நிலையிலேயே மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது.



மட்டக்களப்பு மாவட்டம், வளமான விவசாய நிலங்கள், நீண்டு பரந்த களப்புகள் மற்றும் செழுமையான கடலோர அமைப்பைக் கொண்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசமாகும். இருப்பினும், அண்மைக்காலமாக உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் பூகோள வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளால், இம்மாவட்டம் கடுமையான வெப்பமான (வெப்பமான) காலநிலையை எதிர்கொண்டு வருகிறது. வழக்கத்திற்கு மாறாக உயர்ந்து வரும் வெப்பநிலை, பருவம் தப்பிய மழைவீழ்ச்சி மற்றும் நீண்டகால வறட்சி நிலைமை என்பன மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கை முறைமைக்கும் பிராந்தியப் பொருளாதாரத்திற்கும் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளன.


மட்டக்களப்பு மாவட்டம் நாட்டின் உலர் வலயத்தில் அமைந்துள்ளதால், இயல்பாகவே கோடைகாலத்தில் அதிக வெப்பத்தைக் கொண்டிருக்கும். ஆனால், தற்போதைய காலங்களில் பகல் நேர வெப்பநிலை 35 பாகை முதல் 38பாகை செல்சியஸ் வரை உயர்ந்து, வெப்பக் காற்றின் உக்கிரத்தை மக்கள் உணரும் நிலை ஏற்பட்டுள்ளது. மே முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் வீசும் வறண்ட 'கச்சான் காற்று' நிலத்தின் ஈரப்பதத்தை உறிஞ்சி, வெப்பத்தை மேலும் தீவிரமாக்குகிறது. வடகீழ் பருவக் காற்று மூலம் கிடைக்க வேண்டிய மழைவீழ்ச்சி சீரற்றதாக மாறியுள்ளதால், நீர்நிலைகளின் நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

இலங்கையின்கிழக்குமாகாணத்தில்விவசாயத்திற்கும் மக்களின் அன்றாட நன்னீர் தேவைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது அதன் பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்பாகும். 'மீன் பாடும் தேன் நாடு' எனப் போற்றப்படும் மட்டக்களப்பு மாவட்டம், வளமான விவசாய நிலங்களையும் ஏராளமான இயற்கை மற்றும் செயற்கை நீர்நிலைகளையும் கொண்ட ஒரு பிராந்தியமாகும். குறிப்பாக, மாவட்டத்தின் விவசாயப் பொருளாதாரம், குடிநீர் விநியோகம் மற்றும் சூழலியல் சமநிலை என்பன இங்குள்ள குளங்களிலேயே முழுமையாகத் தங்கியுள்ளன. இருப்பினும், அதிகரித்து வரும் மக்கள் தொகை, பருவநிலை மாற்றங்கள் மற்றும் ஏரிகள் வண்டல் படிந்து தூர்ந்து போதல் போன்ற காரணங்களால் இக்குளங்களின் கொள்ளளவு கணிசமாகக் குறைந்துள்ளது. இதனால், மட்டக்களப்பில் உள்ள குளங்களைப் பராமரிப்பதும், அவற்றின் கொள்ளளவை விரிவாக்கம் செய்வதும் காலத்தின் மிக முக்கியத் தேவையாக மாறியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்பட்ட 700க்கும் மேற்பட்ட சிறியளவான நீர்ப்பாசன குளங்களில் தற்போது 30 வீதமான குளங்கள் மட்டுமே அதிகாரபூர்வ பதிவேடுகளில் காணப்படுவதாக மாவட்ட கமத்தொழிற் தினைக்களம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாவட்ட கமத்தொழில் சேவைகள் உதவி ஆணையாளரின் தகவல்களின் படி, 1976-ம் ஆண்டுக்கு முன்னர் 786 சிறிய நீர்ப்பாசன குளங்கள் பதிவேடுகளில் இருந்துள்ளன. ஆனால், தற்போதைய அதிகாரபூர்வ பதிவேடுகளின் படி இந்த எண்ணிக்கை 233 ஆக குறைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான பல குளங்கள் அமைந்திருந்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றன.

பெரிய நீர்பாய்ச்சல் குளமாக உன்னிச்சைக்குளமும் ஒன்றாகும். இது மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகும். விவசாய நீர்ப்பாசனத்திற்கு மட்டுமன்றி, மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பெரும்பாலான பிரதேசங்களுக்கான பிரதான குடிநீர் ஆதாரமாகவும் இது விளங்குகிறது. இதேபோன்று நாவற்கிரிகுளம் போரதீவுப்பற்று மற்றும் அதனைச் சார்ந்த விவசாய நிலங்களுக்கு முதன்மை நீர் ஆதாரமாகத் திகழ்கிறது. ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் உள்ள உறுகாமகுளம் ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் பரந்த அளவிலான நெற்செய்கைக்கு நீர் வழங்கும் முக்கிய குளமாகும்.



கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வடமுனைக் குளம் மற்றும் பிற சிறிய குளங்களான கோரளைப்பற்று, பட்டிப்பளை, வெல்லாவெளி போன்ற பிரதேசங்களில் பல நடுத்தர மற்றும் சிறிய குளங்கள் கிராமிய விவசாயத்தையும் நிலத்தடி நீர்மட்டத்தையும் பாதுகாத்து வருகின்றன.இருந்தபோதிலும் நூற்றுக்கணக்கான குளங்கள் கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன.

கடந்த சில தசாப்தங்களாக முறையான பராமரிப்பின்மை மற்றும் இயற்கைக் காரணிகளால் மட்டக்களப்பில் உள்ள குளங்கள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. மழைக்காலங்களில் ஆறுகள் மற்றும் நீர்வழிப் பாதைகள் வழியாக அடித்து வரப்படும் மண் மற்றும் கழிவுகள் குளங்களின் அடியில் படிவதால், குளங்களின் ஆழமும் நீர் கொள்ளளவும் பெருமளவில் குறைந்துள்ளன.

இதேபோன்று குளங்களின் கரையோரங்கள் ஆக்கிரமிக்கப்படுவதாலும், ஆகாயத்தாமரை போன்ற தேவையற்ற நீர்வாழ் தாவரங்கள் அடர்த்தியாக வளர்வதாலும் நீரின் தரம் மற்றும் அளவு பாதிக்கப்படுகிறது. பல குளங்களின் அணைக்கட்டுகள் மற்றும் நீர்வெளியேற்று மதகுகள் பழமை வாய்ந்தவையாக இருப்பதால், அதிக மழைவீழ்ச்சியின் போது உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுகிறது.

அதேபோன்று பல குளங்கள் கவனிப்பாரற்ற நிலைமையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இயற்கையாக உருவாகிய குளங்களானது வெறுமனே தேவையற்ற ஒன்றாக உருவாகவில்லை.அதன்சூழல் தாக்கங்களுக்கு ஏற்றதால்போல உருவாக்கப்பட்ட குளங்கள் கவனிப்பாரற்ற நிலைக்கு சென்றதன் காரணமாக அதன் தாக்கம் என்பது இயற்கையினால் மக்களுக்கு சென்றடைகின்றது.

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான பொருளாதாரத் தூண் நெற்செய்கையாகும்.இந்த நெற்செய்கையின் மூலம் நாங்கள் நீர்மேலாண்மையினை சிறப்பாக செய்ய முடியும் என்பதுடன் இயற்கையின் சமநிலைக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது சூழலை மாற்றம் செய்யமுடியும். குளங்களை விரிவாக்கம் செய்வதன் மூலம் சேமிக்கப்படும் மேலதிக நீரைக் கொண்டு, 'மகா' போகம்(பெரும்போகம்) பருவத்தில் மட்டுமன்றி, நீர்த்தட்டுப்பாடு நிலவும் 'யால' போககும்(சிறுபோகம்) பருவத்திலும் முழுமையான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.



அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த காலப்பகுதியில் பாரியளவில் குடிநீர் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளது.படுவான்கரை பிரதேசத்தின் பெரும்பாலான பகுதி கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொண்டுள்ள நிலையில் பிரதேசசபையினால் நீர் விநியோகம் செய்வதற்கு அதிகளவான பணம் செலவழிக்கப்படுகின்றது. குடிநீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.

கோடைகாலத்தில் போரதீவுப்பற்று, வெல்லாவெளி, கோரளைப்பற்று போன்ற உள்நாட்டுக் கிராமங்கள் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றன. உன்னிச்சை மற்றும் உறுகாமம் போன்ற பிரதான குளங்களை விரிவாக்குவதன் மூலம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் தடையின்றி விநியோகிக்க முடியும்.மழை காலங்களில் பிரதான குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டு பெருமளவான நீர் கடலுக்குள் வீணாக அனுப்பப்படுகின்றது.இந்த குளங்களை விரிவுபடுத்தி நீர்சேமிப்பினை மழைகாலங்களில் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதேபோன்று கித்துள்-றூகம் குளங்கள் இணைக்கப்பட்டு பாரிய நீர்பாசன திட்டம் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதேபோன்று குளங்களில் அதிகளவு நீர் நீண்ட காலம் தேங்கி நிற்கும் போது, அதனைச் சுற்றியுள்ள கிணறுகள் மற்றும் தரைக்கீழ் நீர் நிலைகளின் நீர்மட்டம் உயர்கிறது. இது கரையோரப் பகுதிகளில் கடல் நீர் உள்நுழைந்து நன்னீர் உவர்தன்மையாக மாறுவதைத் தடுக்கிறது.

பருவமழைக் காலத்தில் பெய்யும் அதிகப்படியான மழைநீரை விரிவாக்கப்பட்ட குளங்களில் தேக்கி வைப்பதன் மூலம், தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குவதைத் தவிர்க்கலாம். சேமிக்கப்படும் மேலதிக நீர், கடுமையான கோடைகாலத்தில் ஏற்படும் வறட்சியை எதிர்கொள்ளப் பெரிதும் உதவும். குளங்கள் பரந்து விரிவடையும் போது நன்னீர் மீன்பிடித் தொழில் மேம்படும். இது கிராமப்புற மீன்பிடித் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும். மேலும், பறவைகள், காட்டு விலங்குகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கான இயற்கையான உறைவிடமாக இக்குளங்கள் திகழும்.

தொடர்ச்சி: பக்கம் 15




கோபிகை

**“ ஏனடா வீட்டுப்பாடம் செய்யேல்லை?”**

“ ரீச்சர், வீட்டில ஒரே சண்டை, அப்பா குடிச்சிட்டு வந்து அம்மாவோட சண்டை பிடிச்சுக்கொண்டே இருப்பார், இரவு பத்து பொலிஸ் வந்தது, எப்ப பாத்தாலும் சண்டை, வீட்டவீட்டை படிக்கவே ஏலாது ரீச்சர்....”

**இது ஒரு மாணவனின் பதில்.**

“ சாப்பிட்டீங்களா? ”
“ இல்லை ரீச்சர்”
“ ஏனடா, மத்தியானம் சாப்பிடேல்லையா? ”
“ இல்லை ரீச்சர், அம்மா சமைக்கேல்லை, ”
“ ஏன் அம்மா சமைக்கேல்லை? “
“ அப்பா வேலை செய்த காசை எல்லாம் குடிச்சிட்டு வந்திட்டார், காசில்லை எண்டு அம்மா சமைக்கேல்லை”



**இது ஆறு வயது குழந்தை சொன்ன பதில்.**

“ ஏன் ஒரு கிழமை படிக்க வரேல்லை? “
“ ரீச்சர், வீட்டை சண்டை ரீச்சர், அப்பா, அடிச்சு துரத்தி, வீட்டை விட்டு கலைச்சு, வேற இடத்தில போய் தான் இருக்கிறம், அதுதான் வரேல்லை”
“ ஏனம்மா சட்டை தோய்க்கேல்லையா? செருப்பு எங்க? “
“ அம்மா வேலைக்கு போய், வர நேரம் போட்டுது ரீச்சர், அதுதான் சட்டை தோய்க்கேல்லை”
“ வீட்டிலை ஆரார் இருக்கிறீங்கள்? “
“ நானும் அப்பாவும் அண்ணாவும் தான் ரீச்சர்”
“அம்மா இல்லையா?”
“ அம்மா அப்பாவோடை சண்டை பிடிச்சிட்டு, வேற ஆரோடையோ போட்டாவாம், அப்பா சொன்னவர்”



இப்படி எல்லாம் பதில்களைக் கேட்கும் போது, மனதின் இழைகளில் மிகவும் கொடுமையான வலி ஒன்று ஊடுருவி இதய நாளங்களை வலிக்கச் செய்துவிடுகிறது.



ஆண்கள் மட்டும் இல்லை, பெண்கள் சிலரும் இத்தகைய தவறுகளைச் செய்கின்றனர். மனச்சாட்சியற்ற மனித வாழ்வியலை இப்போது, காணமுடிகிறது.

பிள்ளைகள், தம்முடைய வசந்தகால உலகத்தில் வாழ முடியாமல், மூச்சு முட்டுகிற அவலத்தினுள் சிக்கித் தவிக்கிற நிலைமையே காணப்படுகிறது. அது அவர்களுக்கு எவ்வளவு பெரிய துயரத்தைக் கொடுக்கும் என்பதை பெரியவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

ஒரு மனிதன், மனநிம்மதியோடு வாழ்வதற்கான சகல வாய்ப்புகளையும் இயற்கை நமக்காக ஏற்படுத்தியே வைத்துள்ளது. ஆனால், மனிதர்களாகிய நாங்கள் தான் அதைப்பற்றி எவ்வித அக்கறையும் இன்றி, இயற்கையையும் அழித்து, எமது வாழ்வையும் சிக்கலுக்கு உள்ளாக்குகிறோம்.

சிவந்த கண்களும் தடித்த உதடுகளும் வறண்ட பார்வையுமாக திரிகிற ஆட்களைப் பார்க்கும் போது, மனதில் ஒருவித வேதனை தலைதூக்குகிறது. இவர்கள், தந்தையாக, அண்ணனாக, கணவனாக மகனாக என பல வகிபாகங்களைக் கொண்டவர்கள். எதிர்காலத்தை கட்டி எழுப்ப வேண்டிய எமது தூண்கள். அல்லது எதிர் கால தலைவர்களை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்புக்குரியவர்கள். ஆனால், அந்த சிந்தனை சிறிதுமின்றி, தம்மையும் அழித்து, குடும்பத்தையும் அழிக்கிற பொல்லாத செயலைச் செய்கின்றனர்.

எளிமையான கிராமத்து மக்களின் வாழ்க்கை என்பது ஒரு காலத்தில் மிகவும் அழகானதாக இருந்தது, அவர்கள் வஞ்சகமற்ற, சூதுவாதில்லாத மனிதர்களாக வாழ்வதைக் கண்டிருந்தோம், ஆனால் இப்போது, கிராமங்களில் பரவியுள்ள சட்டவிரோத மதுபாவனை மற்றும் போதைப்பாவனை போன்றவற்றால் அவர்களின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறுபட்டுள்ளது. எப்போதும் மது மயக்கத்தில் இருப்பதால் வாழ்க்கை பற்றிய புரிதலே இல்லாதவர்களாக மாறியுள்ளனர். கிராமங்கள் அபாயகரமான ஒரு நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இளைஞர்களின் பொறுப்பற்ற தன்மையும் வாழ்க்கை மீதான அக்கறையற்ற பார்வையும் எப்படியாவது பணம் கிடைத்தால் போதும் என்கிற மனநிலையும் அவர்களின் எதிர்காலத்தை படு பாதாளத்தில் தள்ளிவிடுகிறது.

அண்மையில் மாணவர்கள் சிலர் எதிர்கொள்கிற துன்பியல் சம்பவங்களைப் பார்த்தபோதும் கேட்ட போதும் குதூகலமான குழந்தைப் பருவத்தை கொன்று புதைக்கிற பெரியவர்களை என்ன சொல்லி திட்டுவது என்று தெரியவில்லை.

எனது மாணவர்கள் இருவர், பெற்றவர்கள் இருவரும் தனித்தனி பாதை, அதாவது, தாயை வேறொரு ஆணுடன் குற்றம் சுமத்தி, எப்போதும் சண்டை செய்கிற கணவன், கணவனோடு வாழ முடியாத நிலையில் இந்த இரண்டு பிள்ளைகளுடன் தனியாக வாழுகிற மனைவி. பன்னிரண்டு ஆண்டுகளாக பிரிந்து வாழுகிற வாழ்க்கை, தன்னுடன் வாழாத மனைவி, வேறு பலருடன் தொடர்பு வைத்துள்ள நம்பியுள்ள, கணவனின் வார்த்தைகள், கேட்க முடியாதவை. இவை எல்லாவற்றினதும் கூட்டாக பாதிக்கப்பட்டு சீரழிவது அந்த இரண்டு பிள்ளைகளும் தான், தற்போது நிம்மதியாக ஒரு வீட்டில் வாழ முடியாது, அங்கும் இங்குமாக திரிகிற தாயோடு, அலைந்து திரிகிறார்கள் அந்த இரண்டு பிள்ளைகளும்.



தாயும் பிள்ளைகளும் வீதியில் சென்ற போது, அவர்களை அடித்து, துன்புறுத்தி, வயது வந்த மகளின் சட்டையைக் கிழித்து, மனைவியை நடு வீதியில் அரை நிர்வாணமாக்கி, மக்கள் பலரும் பார்க்கும் போது, செய்ய பாபட்ட ஒரு கொடுமையான செயல் இது.

இதில், இன்னுமொரு விடயம் என்னவென்றால், வேடிக்கை பார்த்த அத்தனை பேரில், ஒருவர் கூட வந்து, அவர்களுக்கு உதவவில்லை என்பது.

நீதி நியாயங்கள் அற்று பிள்ளைகள் தண்டிக்கப்படுவதைக் காணும் போது மனம் கனத்து விடுகிறது. அவர்களின் அழகான உலகத்தைச் சிதைத்து, சின்னாபின்னமாக்கிவிட்டு, கடைசி காலங்களில் அழுவதாலோ, அரற்றுவதாலோ ஒருவித பிரயோசனமும் இல்லை.

**இந்தச் சமூகம் எதை நோக்கிச் செல்கிறது,? கடைசியில் எதைக்காணப்போகிறது?**

அன்பு, பாசம் கருணை, இரக்கம் இவை ஏதுமில்லாத மனித ஜடங்களை வளர்த்து விட்டு, துயரமடையப் போகிறோம் என்பதில் ஐயமில்லை.

• • •




# கறுப்பு ஜூலை முதல் நில உரிமை வரை: மலையகத் தமிழர்களின் ஓயாத உரிமைப் போராட்டம்

மருதன் ராம்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை இனப் படுகொலை இலங்கையின் வரலாற்றில் மிக ஆழமான காயத்தை ஏற்படுத்திய நிகழ்வாகும். இந்த இனப்படுகொலையால் வடக்கு, கிழக்கு தமிழர்கள் மட்டு மல்லாது, மலையகப் பெருந்தோட்டத் தமிழ் மக்களும் ஆழமான பாதிப்புகளை எதிர்கொண்டனர். தமிழர் என்ற ஒரே அடையாளத்திற்காக உயிர்கள் பறிக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன.



சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டனர். இன்று 43 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. ஆனால், மலையக மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதா? என்ற கேள்வி தொடர்கதையாக உள்ளது. கறுப்பு ஜூலையின் வடிவம் மாறியிருக்கலாம். ஆனால் காணி உரிமை, வாழ்வாதார பாதுகாப்பு, தொழிலாளர் உரிமை மற்றும் நிர்வாக அழுத்தங்கள் போன்ற பிரச்சினைகள் இன்னும் தொடர்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் பல தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றன.

கறுப்பு ஜூலை பற்றி நினைவு கூரும் போது பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் நடந்த சம்பவங்களே பேசப்படுகின்றன. ஆனால், மலையகத் தமிழர்களும் அந்த வன்முறையில் பலியாகினர். கொழும்பு, கண்டி, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் பதுளை போன்ற பகுதிகளில் வேலைக்காக வாழ்ந்திருந்த மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டனர். பலர் உயிரிழந்தனர். வீடுகள் எரிக்கப்பட்டன. பல குடும்பங்கள் பெருந்தோட்டங்களுக்கு மீண்டும் தப்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சிலர் இந்தியாவிற்கும் அகதிகளாகச் சென்றனர்.



அந்த அனுபவம் மலையக மக்களின் மனதில் ஒரு கேள்வியை பதித்தது. “இந்த நாட்டில் நமக்கு உண்மையான பாதுகாப்பு இருக்கிறதா?” என்று எழுந்த அந்த கேள்வி இன்று வரை தொடர்கின்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகும் பெருந்தோட்ட நிர்வாக அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், பல தோட்டங்களில் தொழிலாளர்கள் இன்னும் முழுமையான சுதந்திரத்தையும் சம உரிமையையும் அனுப விக்கவில்லை என்று தொழிற்சங்கங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றன.

சம்பளம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம் பிக்கை நிதி, வீடமைப்பு, குடிநீர், காணி உரிமை, விவசாயம், கல்வி, சுகாதாரம் என பல விடயங்களில் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்த சகல பிரச்சனைகளிலும் மலையக மக்களின் மிகப்பெரிய கோரிக்கை ‘நிரந்தர காணி உரிமை’. பல தலைமுறைகளாக வாழும் வீடுகளுக்குக் கூட சட்டபூர்வமான உரிமைப் பத்திரம் இல்லை.

இதன் விளைவாக, வீட்டை விரிவுபடுத்த முடிய வில்லை. வங்கிக் கடன் பெற முடியவில்லை. நிர்வாகத் தின் அனுமதியின்றி நிலத்தைப் பயன்படுத்த முடியவில்லை. தலைமுறைகளுக்கு சொத்துரிமை மாற்றுவதிலும் சிக் கல்கள் உள்ளன. குறிப்பாக தங்களுக்கான மலசல கூடத்தை அமைப்பதற்கு கூட தோட்ட நிர்வாகத்தின் அனுமதியை பெற வேண்டிய நிலை இன்றும் காணப் படுகின்றது. அவ்வாறு அனுமதி பெறாமல் அமைக் கப்படும் சகல நிர்மாணங்களும் தோட்ட நிர்வாகத்தால் அகற்றப்படும்.

அத்துடன் தோட்ட முகாமையாளர் உள்ளிட்ட அதி காரிகளால் தொழிலாளர்களும் அவர்கள் சார்ந்தவர்களும் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இன்று வரை மலையக பகுதிகளில் பதிவாகி வருகின்றன. உதாரணமாக, பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல -உனுகொல்ல தோட் டத்தில், இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படும் சம்பவம் தொடர்பில் பரபரப்பு நிலவி வருகிறது. குறித்த தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர், கடந்த வாரம் முகாமையாளர் அலுவலகத்தில் முகாமையாளரால் தாக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுயதொழில் ஒன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தில் கையொப்பம் பெறுவதற்காக அந்த அலுவ லகத்துக்குச் சென்றபோதே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.இந்த சம்பவத்தைக் கண்டித்து தோட்டப் பொதுமக்கள், இளைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனை யடுத்து, மலையக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச் செயலாளர் ரகுராஜ் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்து ரையாடியுள்ளனர்.

இளைஞர் தாக்கப்பட்டமை தொடர்பில், முகாமை யாளருக்கு எதிராக காவல்துறையிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான முதற்கட்ட விசார ணைகள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவமும் மேற்கூறிய அதே கேள்வியை மீண்டும் எழுப்புகிறது. அதேபோன்று இரத்தினபுரி மாவட்டம் கஹ வத்தை பகுதியில் அமைந்துள்ள நீலகாமம் தோட்டத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடு அடித்து நொறுக்கப்பட்டு, அங்கு வசித்தவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் தேசியக் கவனத்தைப் பெற்றன.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கறுப்பு ஆடை அணிந்த கும்பலொன்று நீலகாமம் தோட்டப் பகுதியில் கட்டப்பட்ட வீட்டை உடைத்து, அங்கிருந்தவர்களை தாக்கி யது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் சிலரை கஹவத்தை காவல்துறையினர் கைது செய்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் முன்னாள் இராணுவத்தினர் உள்ளதாகவும், தோட்டங்களில் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை அகற்றிவிட்டு தொழிலாளர் களையே காவலாளிகளாக நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்தன.




மேலும், மலையக மக்களுக்கு எதிரான இந்த வன்முறைகளைக் கண்டித்து கொழும்பு மற்றும் தோட்டப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. இந்த விவகாரம் தேசிய அரசியல் மட்டத்திலும் பேசப்பட்டது. இந்தச் சம்பவம் வெறும் வீட்டுப் பிரச்சினை அல்ல. ஒரு குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பு, வருமானம், எதிர்காலம் ஆகியவற்றோடு நேரடியாக தொடர்புடையது. அதேநேரம், “இந்த நாட்டில் நமக்கு உண்மையான பாதுகாப்பு இருக்கிறதா?” என்ற கேள்வியும் மீண்டும் எழுதுகிறது.

## கறுப்பு ஜூலையின் பாடம்

ஒரு சமூகத்தின் உரிமைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படும் போது, அது ஒரு கட்டத்தில் பெரிய சமூக நெருக்கடியாக மாறும் என்ற மிகப்பெரிய பாடத்தை கறுப்பு ஜூலை கற்றுக் கொடுத்துள்ளது. மக்களின் குரலைக் கேட்கா மல், அவர்களின் காணிகளைப் பாதுகாக்காமல், வாழ்வா தாரத்தை உறுதிப்படுத்தாமல், சமூக நீதி ஏற்படாது. அதே போன்று தோட்ட முகாமையாளர்கள் உற்பத்தியை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், தொழிலாளர் உரிமை, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை உணர வேண்டும்.

கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், அவை உரை யாடலால் தீர்க்கப்பட வேண்டும். அச்சுறுத்தல், வன்முறை, பயிர் அழிப்பு அல்லது குடியிருப்பு சேதப்படுத்தல் போன்ற செயல்கள் எந்தச் சூழலிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. அவ்வாறான குற்றச்சாட்டுகள் எழும்போது, அவை சுயாதீனமாகவும் சட்டத்தின் அடிப்படையிலும் விசாரிக்கப்பட வேண்டும். அதேநேரம் மலையக மக்களுக்கு நிரந்தர காணி உரிமையை வழங்குதல், பெருந்தோட்ட வீடுகளுக்கு உறுதி பத்திரம் வழங்குதல், விவசாய நிலங்களை சட்ட ரீதியாக பாதுகாத்தல், தொழிலாளர்-

தொடர்ச்சி: பக்கம் 15




**A.M.L லம்பேட்**

செம்மணி சிந்துபாத் பகுதியில் மனிதபுதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இன்றளவு வரையில் 454 வரையிலான மனித எச்சங்கள (Human Skeletal) முழுமையாக மற்றும் பகுதியளவில் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளது. இந்த புதைகுழிகள் பாரியளவிலான பிரதேசத்தினை உள்ளடக்ககூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.



இது தொடர்பில் சிங்கள அரசாங்கமானது வழமையைப்போன்றே உள்ளககட்டமைப்புக்களினூடாகவே Domestic Processes) உண்மையினை கண்டறியும் செயற்பாடானது இடம் பெறும் என நீதியமைச்சர் தெரிவித்து இருப்பதுடன் சர்வதேச ரீதியான கண்காணிப்பக்களினையும் (Independent international assistance) மறுத்துள்ளார். இது கடந்த காலங்களினைப்போலவே யுத்த குற்றவாளிகளினை (War Criminals) பாதுகாத்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதிமறுப்பு போன்றவற்றினை தொடர்ந்து தமது நிலைப்பாடாக கொண்டிருக்கின்றது.

சிங்கள அரசாங்கத்தினுடைய பொறுப்புக்கூறல் கட்டமைப்பின் மறுப்பானது (Post-conflict accountability framework – போருக்குப் பிந்தைய பொறுப்புக்கூறல் கட்டமைப்பு) தீர்க்கப்படாத முக்கியமான மனித உரிமை மற்றும் நீதிசார் சவால்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இது ஒரு குறிப்பிட்ட புதைகுழி தொடர்பான விசாரணை மட்டுமல்ல மாறாக, சிங்கள் தேரவாத கட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இனசுத்திகரிப்பின் (Genocide) ஒர் அங்கமாகும். கடந்தகால மனித உரிமை மீறல்களை எதிர்கொள்வதற்கான இடைக்கால நீதிக்கான கட்டமைப்பு (Transitional justice architecture – இடைக்கால நீதிக்கான கட்டமைப்பு), உண்மை கண்டறிதல், பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நிறுவன சீர்திருத்தம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும் உண்மையை கண்டறிதல், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள், அரச நிறுவனங்களின் பொறுப்பு மற்றும் நீதிக்கான சர்வதேச தரநிலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறுபான்மை சமூகமொன்றின் பரந்த அரசியல் மற்றும் சட்டப் ரீதியான பிரச்சினையாகும்.

தமிழீழ பகுதி முழுவதும் காணப்படுகின்ற செம்மணி போன்ற மனித புதைகுழிகள், வரலாற்று நினைவுகளின் அடையாளங்களாக மட்டுமல்லாமல், உரிமைக்காக போராடிய சுதேச இனமொன்றின், சிறு பான்மை இனக்குழுத்தின் மீதான இனச்சுத்திகரிப்பின் ஆதாரங்களாகவும் விளங்குகின்றன. பாதிக்கப்பட்ட சமூகத்தின் உண்மை அறியும் உரிமை (Right to Truth), காணாமல் போனோரின் நிலையை அறியும் உரிமை மற்றும் நீதியை நாடும் உரிமை ஆகியவை நவீன மனித உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

சர்வதேச நாடுகளில் பல்வேறு மோதல்களுக்குப் பின்னர் கண்டறியப்பட்ட புதைகுழிகள் சர்வதேச நீதிக்கான (International Justice) முக்கிய ஆதாரங்களாக மாறியுள்ளன. ஹோலோகாஸ்டholocaust) ஆர்மேனிய (Armenian Genocide) மக்களின் இனப்படுகொலை, முன்னாள் யுகோஸ்லாவிய மோதல்கள், ருவாண்டா(Rwandan genocide) மற்றும் கொசோவோ (kosovo genocide) போன்ற நிகழ்வுகள், கடந்தகால அநீதிகளை எதிர்கொள்ள சர்வதேச சமூகம் எவ்வாறு சட்ட மற்றும் நிறுவன பொறிமுறைகளை உருவாக்கியது என்பதை காட்டுகின்றன.

இந்த அனுபவங்கள் ஒரு முக்கியமான பாடத்தை வழங்குகின்றன: புதைகுழிகள் என்பது வெறும் தொல்லியல் ஆதாரங்கள் அல்ல் அவை மனித உரிமை மீறல்களின் சாட்சியங்களாகவும், சர்வதேச சமூகத்தின் நீதிக்கான பொறுப்பை நினைவூட்டும் ஆதாரங்களாகவும் உள்ளன.

இந்த பின்னணியில், செம்மணி விவகாரமும் நீதியை சர்வதேசமயமாக்கல் (Internationalisation of justice – நீதியை சர்வதேசமயமாக்கல்) என்ற பரந்த விவாதத்துடன் தொடர்புபடுகிறது.

சர்வதேச சட்டப் பொறுப்புகள் (International legal obligations – சர்வதேச சட்டப் பொறுப்புகள்) அடிப்படையில், அரசுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், ஆதாரங்களைப் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான தீர்வுகளை வழங்கவும் கடமைப்பட்டுள்ளன. இங்கு மனித உரிமைகளின் நெறிமுறைச் சட்டக் கட்டமைப்பு (Normative framework of human rights – மனித உரிமைகளின் நெறிமுறைச் சட்டக் கட்டமைப்பு) முக்கிய பங்கு வகிக்கிறது.

இது: மனித உயிரின் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி rule of law), நீதிக்கான சமமான அணுகல், பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம், மீண்டும் மீறல்கள் நடை பெறாத உத்தரவாதம் ஆகிய கொள்கைகளை அடிப்ப டையாகக் கொண்டுள்ளது.

மேலும், நவீன இடைக்கால நீதியில் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய நீதி அணுகுமுறை (Victim-centred justice – பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய நீதி அணுகுமுறை) முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதாவது, அரசியல் சமரசங்களை விட பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை, நீதி மற்றும் கண்ணியம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.



செம்மணி விவகாரம் இலங்கையில் காணப்படும் பொறுப்புக்கூறல் பற்றாக்குறையை (Accountability deficit – பொறுப்புக்கூறல் பற்றாக்குறை) வெளிப்படுத்தும் முக்கியமான உதாரணமாக பார்க்கப்படுகிறது.

சிங்கள அரசாங்கமானது முள்ளிவாய்க்கால் இறுதி இனவழிப்பின்போது யுத்தகுற்றங்களில் ஈடுபட்ட படைத்தரப்புக்களினை உள்நாட்டு பொறிமுறை மற்றும் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் பாதுகாத்து வருகின்றது. மேலும் செம்மணி விவகாரத்துடன் தொடர்புபட்ட நபர்கள், இராணுவத்தின் பல்வேறுபட்ட உயர்நிலைபதவிகளினை கொண்டிருப்பதுடன் அவர்களுக்கு நீதித்துறையின் சட்டரீதியான பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் பொறிமுறைகள் பல ஆண்டுக ளாக பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. இருப்பினும், உள்நாட்டு பொறிமுறைகளின் நம்பகத்தன்மை, சுயாதீனம் மற்றும் செயல்திறன் குறித்து தொடர்ந்து கேள்விகள் எழுந்துள்ளன.

இந்த சூழலில், இலங்கையின் அரச மற்றும் சட்டத்துறைகட்டமைப்புக்களின் நிறுவன ரீதியான பொறுப்பின்மை (Institutional impunity) என்பது போருக்குப் பிந்தைய சமூகங்களில் நீதியை பாதிக்கும் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.



நீதியின் நம்பகத்தன்மை என்பது குற்றச்சாட்டுகளை மறுப்பதில் மட்டும் இல்லை;மாறாக,வெளிப்படையான விசாரணைகள், ஆதாரபூர்வமான அணுகுமுறை மற்றும் சட்டத்தின் சமமான நடைமுறை ஆகியவற்றில் உள்ளது.

செம்மணி விவகாரத்தினை தமிழர் தரப்பானது ஒருமித்து கையாள்வதிலும்;;; இராஜதந்;திரரீதியாக சர்வதேச சமூகத்துடன் கையாள்வதில் தோல்வியினை கொண்டுள்ளதுடன் சிங்கள தரப்பானது தந்திரோபாயமாக வெற்றிகரமாக தமது சார்பாக கையாள்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்தேசிய முன்னணியின் முயற்சி வெளியுலகிற்கு அடையாளப்படுத்தினர். இருப்பினும், சர்வதேச அரசியலில் தாக்கத்தை உருவாக்குவதற்கு தொடர்ச்சியான மற்றும் நிறுவனமயமான இராஜதந்திர அணுகுமுறை தேவைப்படுகிறது.

நவீன சர்வதேச உறவுகளில் அரசியல் அறிக்கைகள் மட்டுமே போதுமானவை அல்ல. அதற்கு பதிலாக கொள்கை ஆய்வு நிறுவனங்கள்,சட்ட நிபுணர் வலையமைப்புகள்,கல்வியியல் ஆய்வுகள்,ஊடக மூலோபாயம் போன்றவை அவசியமாகின்றன.

இதுவே கொள்கை அடிப்படையிலான சர்வதேச ஈடுபாடு (Policy-oriented international engagement) ஆகும். இன்றைய உலக அரசியலில் புலம்பெயர் இராஜதந்திரம் (Diaspora diplomacy) ஒரு முக்கியமான சர்வதேச கருவியாக மாறியுள்ளது. புலம்பெயர் தமிழர் சமூகமானது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு, மனித உரிமை அமைப்புகளுடன் இணைப்பு, சட்ட ஆவணப் படுத்தல்,சர்வதேச ஊடக ஈடுபாடுமூலம் நீண்ட கால தாக்கத்தை உருவாக்க முடியும். இதற்கு ஆதார அடிப்படையிலான வாத முன்வைப்பு (Evidence-based advocacy – ஆதார அடிப்படையிலான வாத முன்வைப்பு) மற்றும் மூலோபாய ஆதரவு மற்றும் சர்வதேச மூலோபாய ரீதியான வகிபங்கு (Strategic advocacy) முக்கியமானவை. முக்கியமாக உணர்ச்சியை மையமாகக் கொண்ட அணுகுமுறையை விட, சர்வதேச சட்டம், ஆய்வு, ஆதாரம் மற்றும் கொள்கை அடிப்படையிலான அணுகுமுறை அதிகமான சர்வதேச ரீதியில் நம்பகத்தன்மையை உருவாக்கும்.தமிழர் அரசியல் அமைப்புகள், குடியியல் சமூகங்கள், பாதிக்கப்பட்டோர் குழுக்கள் மற்றும் புலம்பெயர் நிறுவனங்கள் இணைந்து ஒரு ஒருங்கிணைந்த சர்வதேச மூலோபாயத்தை உருவாக்க வேண்டும்.

தொடர்ச்சி: பக்கம் 16




Expressions of Interest Now Open – Eelam Tamil Youth in Parliament 2026

Applications are now open for young people under the age of 30 to participate in the Eelam Tamil Youth in Parliament 2026 at Parliament House, Canberra, on Thursday, 15 October 2026.

The day will include:

- Youth Leadership Forum (9:00 am – 11:00 am)
Featuring Senator David Shoebridge and other invited parliamentarians (to be announced as confirmed).

- Youth in Parliament (11:00 am – 5:00 pm)
Hosted by Andrew Charlton MP.

Please note:
• Participation is by Expression of Interest only.
• Applicants will be assessed by an independent selection panel.
• Successful applicants must be available to attend the full program from 8:30 am to 5:00 pm.

Please see the attached flyers and scan the QR code to submit your Expression of Interest.


For enquiries:

Kalyani Inpakumar
kalyaniinpakumar@gmail.com
0425 306 933


EELAM TAMIL YOUTH IN PARLIMENT 2026
An afternoon conversation with Australia's Parliamentarians
Thursday 15 October 2026
11:00 AM - 5:00 PM Afternoon Session
Parliament House Canberra
Empowering the next generation of Eelam Tamil leaders through leadership, advocacy, democratic participation, and meaningful engagement with Australia's parliamentary system.
HOSTED BY
Andrew Charlton MP
Federal Member for Parramatta
PROGRAM HIGHLIGHTS
WELCOME TO PARLIAMENT HOUSE
YOUTH PARLIAMENT SESSIONS
ATTEND QUESTION TIME
GROUP DISCUSSIONS
Q&A WITH PARLIAMENTARIANS
NETWORKING WITH MEMBERS OF PARLIAMENT
Please note: Applicants will be assessed by an independent panel, external to Andrew Charlton's office.
SCAN TO REGISTER!
Scan the QR code to complete the Expression of Interest Form.
Please note: Expressions of Interest will be assessed by an independent selection panel, external to Andrew Charlton MP's office.
Successful applicants must attend the full program from 8:30 am to 5:00 pm.
Anyone under the age of 30 years who has an interest in leadership, public policy, human rights, community advocacy and democratic participation is encouraged to apply.
Empowering the next generation of Eelam Tamil leaders through leadership, democratic participation and meaningful engagement with Australia's Parliament.
FOR ENQUIRIES
Kalyani Inpakumar
kalyaniinpakumar@gmail.com
0425 306 933
Hosted by
ANDREW CHARLTON MP




மாட்ரிட் வீதிகளில் ஸ்பெயின் அணி தனது உலகக் கோப்பை வெற்றியை உற்சாகமாகக் கொண்டாடி வரும் வேளையில், நடப்புச் சாம்பியன் என்ற அந்தஸ்தை இழந்ததை அர்ஜென்டினா ஏற்றுக்கொண்டுள்ளது; இதற்கிடையே, 2026 ஃபிஃபா (FIFA) உலகக் கோப்பைத் தொடர் அதிகாரப்பூர்வமாக நிறைவடைந்துள்ளது.




ஃபிஃபாவின் வரலாற்றிலேயே மிகப்பெரிய போட்டியாக அமைந்த இந்த உலகளாவிய நிகழ்வு பல சிறப்பம்சங்களுடன் நினைவுகூரப்படும்: மூன்று நாடுகள் இணைந்து நடத்தியது, 16 மைதானங்கள், 39 நாட்களில் 104 போட்டிகள், 48 நாடுகளைச் சேர்ந்த 1,039 வீரர்கள் பங்கேற்பு மற்றும் மொத்தம் 308 கோல்கள் அடிக்கப்பட்டது ஆகியவை இதில் அடங்கும்.

கத்தார் 2022 உலகக் கோப்பையின் புள்ளிவிவரங்களை முறியடித்த இந்தத் தொடரின் பிரம்மாண்டம், தொடர்ந்து வளர்ந்து வரும் விளையாட்டுத் திறனுக்கும், விளையாட்டுத் துறையின் புதிய எல்லைகளுக்கும் ஒரு சான்றாகத் திகழ்கிறது.

**2026 உலகக் கோப்பை குறித்த முழுமையான புள்ளி விவரங்கள் இதோ:**

**அதிக கோல்கள் மற்றும் கோல் உதவிகள் (Assists)**

பிரான்ஸ் மற்றும் ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர முன்கள வீரரான கைலியன் எம்பாப்பே, இத்தொடரில் 10 கோல்களை அடித்து தனது இரண்டாவது 'கோல்டன் பூட்' (Golden Boot) விருதை வென்றார். 1970-ல் மேற்கு ஜெர்மனியின் கெர்ட் முல்லருக்குப் பிறகு உலகக் கோப்பை வரலாற்றில் இச்சாதனையைப் படைத்த முதல் வீரர் இவராவார்; 2026 தொடரில் 8 கோல்களை அடித்த லியோனல் மெஸ்ஸியை இவர் முந்தினார்.

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தனது இரண்டாவது கோலை அடித்ததன் மூலம், உலகக் கோப்பை வரலாற்றில் மொத்தம் 22 கோல்களுடன் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை 27 வயதான எம்பாப்பே படைத்தார். அதே போட்டியில், உலகக் கோப்பையில் ஏழு கோல்களை அடித்த முதல் ஆங்கிலேய வீரர் என்ற சாதனையை இங்கிலாந்தின் முன்கள வீரர் ஜூட் பெல்லிங்ஹாம் படைத்தார். அதிக கோல் அடித்தவர்கள்:

- கைலியன் எம்பாப்பே (பிரான்ஸ்): 10 கோல்கள், 4 உதவிகள்
- லியோனல் மெஸ்ஸி (அர்ஜென்டினா): 8 கோல்கள், 4 உதவிகள்
- ஜூட் பெல்லிங்ஹாம் (இங்கிலாந்து): 7 கோல்கள், 1 உதவி
- எர்லிங் ஹாலண்ட் (நார்வே): 7 கோல்கள், 0 உதவிகள்
- உஸ்மான் டெம்பலே (பிரான்ஸ்): 6 கோல்கள், 2 உதவிகள்
- ஹாரி கேன் (இங்கிலாந்து): 6 கோல்கள், 2 உதவிகள்
- மிக்கேல் ஒயர்சபல் (ஸ்பெயின்): 5 கோல்கள், 1 உதவி
- இஸ்மாயிலா சார் (செனகல்): 4 கோல்கள், 1 உதவி
- ஜூலியன் குவினோன்ஸ் (மெக்சிகோ): 4 கோல்கள், 1 உதவி
- வினிசியஸ் ஜூனியர் (பிரேசில்): 4 கோல்கள், 1 உதவி அடுத்த சிறந்த வீரர்களாக, நார்வேயின் மார்ட்டின் ஒடிகார்ட், எம்பாப்பே, மொராக்கோவின் பிராஹிம் தியாஸ், பிரேசிலிய நடுக்கள வீரர் புருனோ குய்மரேஸ் மற்றும் மெஸ்ஸி ஆகிய ஐந்து வீரர்கள் தலா நான்கு கோல் உதவிகளைச் செய்திருந்தனர்.

இங்கிலாந்தும் பிரான்சும் தலா 20 கோல்களுடன் தாக்குதல் புள்ளிவிவரங்களில் முதலிடம் பிடித்தன.

இங்கிலாந்து அணி 14 கோல் உதவிகளையும், 118 கோல் முயற்சிகளையும் (52 இலக்கை நோக்கி), மற்றும் 50 சதவீத பந்து கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தது. அதே சமயம், பிரான்ஸ் அணி 18 கோல் உதவிகளையும், 139 கோல் முயற்சிகளையும் (59 இலக்கை நோக்கி), மற்றும் 51 சதவீத பந்து கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தது.

**அணிகளின் சிறந்த கோல்கள் மற்றும் உதவிகள்:**

- இங்கிலாந்து: 20 கோல்கள், 14 உதவிகள்
- பிரான்ஸ்: 20 கோல்கள், 18 உதவிகள்
- அர்ஜென்டினா: 19 கோல்கள், 12 உதவிகள்
- ஸ்பெயின்: 14 கோல்கள், 10 உதவிகள்
- பெல்ஜியம்: 14 கோல்கள், 10 உதவிகள்

அதிக கோல் தடுப்புகள் மற்றும் கோல் வாங்காத ஆட்டங்கள்

பராகுவே கோல்கீப்பர் ஆர்லாண்டோ கில், தொடர்ச்சியான கோல் தடுப்புகளின் மூலம் ஜெர்மனிக்கு எதிரான தனது அணியின் அதிர்ச்சி வெற்றிக்கு முக்கியப் பங்காற்றினார். இதில், பெனால்டி ஷூட் அவுட்டில் செய்த இரண்டு தடுப்புகளும் அடங்கும். இந்த வெற்றி அவர்களை 16-வது சுற்றுக்கு அழைத்துச் சென்றது.

ஸ்பெயினின் உனாய் சைமன் இறுதியில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல்டன் க்ளோவ் விருதை வென்றார். அதே நேரத்தில், அறிமுக வீரரான கேப் வெர்டேயின் வோசின்ஹா, மிகவும் மறக்க முடியாத சில கோல் தடுப்புகளையும் வீரதீரச் செயல்களையும் வெளிப்படுத்தினார்.

தமிழில்: **ஆர்த்திகன்**

**ஒரு கோல்கீப்பரால் செய்யப்பட்ட அதிகபட்ச தடுப்புகள்:**

- ஆர்லாண்டோ கில் (பரகுவே): 28
- எலாய் ரூம் (குராசோ): 21
- எமிலியானோ மார்டினெஸ் (அர்ஜென்டினா): 20
- கிரிகோர் கோபெல் (சுவிட்சர்லாந்து): 20
- டியோகோ கோஸ்டா (போர்ச்சுகல்): 20
- ஜோர்டான் பிக்ஃபோர்ட் (இங்கிலாந்து): 19
- யாசின் பூனோ (மொராக்கோ): 19
- வோசின்ஹா (கேப் வெர்டே): 18
- சியோன் சுசுகி (ஜப்பான்): 17
- முகமது அல் ஓவைஸ் (சவுதி அரேபியா): 17

உலகக் கோப்பை வெற்றியாளர்களான ஸ்பெயின் அணி அதிகபட்சமாக 7 கோல்களைத் தடுத்துள்ளது. அதனைத் தொடர்ந்து பிரான்ஸ், கொலம்பியா மற்றும் மெக்சிகோ தலா நான்கு கோல்களைத் தடுத்துள்ளன. அர்ஜென்டினா, மொராக்கோ, இங்கிலாந்து, பிரேசில், ஐவரி கோஸ்ட் மற்றும் பரகுவே தலா இரண்டு கோல்களைத் தடுத்துள்ளன.




பாதுகாப்புப் பிரிவில், கத்தார் மற்றும் எகிப்து அணிகள் அதிகபட்சமாக 2 சுயகோல்களை அடித்துள்ளன, அதே நேரத்தில் 10 நாடுகள் தலா ஒரு சுயகோலை அடித்துள்ளன.

**அதிக கோல்கள் விட்டுக்கொடுத்தவை:**

- ஈராக், துனிசியா, இங்கிலாந்து: 12
- உஸ்பெகிஸ்தான், நார்வே: 11
- நியூசிலாந்து, ஸ்வீடன், பிரான்ஸ், கத்தார்: 10
- குராசோ, செனகல், அல்ஜீரியா, ஆஸ்திரியா: 9
- ஜோர்டான், ஹைட்டி, அர்ஜென்டினா, போஸ்னியா & ஹெர்சகோவினா, அமெரிக்கா: 8

**தொடர்ச்சி: பக்கம் 16**




# படையெடுப்புக்குத் தயாராகும் ஈரான் – சமாளிக்குமா அமெரிக்கா?


வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்காவின் அடுத்த கட்ட சமரை எதிர்கொள்ள ஈரான் தனது ஆதரவு ஏமன் அன்சர் அல்லா அமைப்பின் மூலம் மற்றுமொரு களமுனையை திறந்துள்ளது. ஏமன் மீது சவூதி அரேபியா விதித்துள்ள வான்வழி மற்றும் தரைவழி முற்றுகைக்குப் பதிலடியாக, சவூதி கப்பல்களுக்கு அந்த நீரிணையை மூடுவதாக ஹூதிகள் இந்த வாரம் அறிவித்துள்ளனர். இது கடல்வழி முற்றுகையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.




அறிவித்த பின்னர் அவர்கள் அதனை வெறும் எச்சரிக்கையாக அல்லாமல் ஒரு உயிர்ப்புள்ள களமுனையாக உடனடியாகவே மாற்றிவிட்டனர். இரண்டு சவுதி எண்ணெய் கப்பல்களைத் தாக்கினர். அது வெறும் எச்சரிக்கைக்காக சுக்கானில் சுடப்பட்டது அல்ல; அவர்கள் கப்பல்களில் ஒன்றிற்குத் தீ வைத்தனர். இது யேமனின் உள்நாட்டுப் போரை மீண்டும் தூண்டிவிட்டுள்ளது.

சவுதி அரேபியாவும் எமிரேட்ஸும் சமரசம் செய்துகொண்டு, ஹூதிகளைத் தாக்குவதற்காகத் தங்கள் படைகளை மீண்டும் தயார்படுத்தி வருகின்றன. அதே நேரத்தில், சவுதி ஆதரவு பெற்ற தேசிய அரசும் தாக்குதலைத் தொடங்கியுள்ளது. இது மோதலை மேலும் தீவிரப்படுத்தும் கடந்த வாரம் வரை, சவூதி அரேபியா செங்கடலில் உள்ள யான்பு (Yanbu) துறைமுகம் வழியாக நாளொன்றுக்கு சுமார் 4.5 மில்லியன் பீப்பாய் எண்ணெயை ஏற்றுமதி செய்து வந்தது. இதில், ஆசிய சந்தைக்கு விநியோகம் செய்வதற்காக சுமார் 2.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய், பாப்-எல்-மண்டேப் (Bab el-Mandeb) நீரிணையைக் கடந்து தெற்கு நோக்கிச் சென்றது. அந்தப் போக்குவரத்துப் பாதை இப்போது தடைபட்டுள்ளது. இதற்கு மாற்றாக, ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றிச் செல்லும் பாதை பயண தூரத்தை 6,000 முதல் 6,500 கிலோமீட்டர்கள் வரை அதிகரிக்கிறது; இது தொடர்ந்து 10 முதல் 14 நாட்கள் கூடுதல் பயணத்திற்குச் சமமாகும். எரிபொருள் மற்றும் பணியாளர் செயல்பாட்டுச் செலவுகள் மட்டுமே ஒரு கப்பலுக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டாலர் வரை அதிகரிக்கக்கூடும். கடல்சார் காப்பீட்டுச் செலவுகளும் பெருமளவு உயர்ந்துள்ளன, மேலும் சில காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடு வழங்க மறுக்கின்றன.




சவூதியர்கள் பேச்சுவார்த்தை நடத்த மறுப்பதுடன், தங்கள் கடற்படை மற்றும் நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு ஏற்கனவே எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளனர். இச்சூழ் நிலையில் நிலைமை மிகத் தீவிரமாக மோசமடையக் கூடும். ஐரோப்பிய ஒன்றியம் 'ஆஸ்பிடிஸ்' (Aspies) நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது; இதன் நோக்கம் முற்றிலும் தற்காப்பு சார்ந்தது—அதாவது, யேமன் நிலப்பரப்பில் தாக்குதல் நடத்துவதற்கான அனுமதி இன்றி, இப்பகுதியில் சட்டப்பூர்வமான வணிகப் போக்குவரத்தைப் பாதுகாப்பதே இதன் பணியாகும். இதற்கு மாறாக, இப்பகுதியில் செயல்படும் ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை தனித்தனி கட்டளைகளின் கீழ் செயல்படுகின்றன; யேமனில் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஆக்கிரமிப்பு அல்லது தாக்குதல் சார்ந்த பணிகளை அவை மேற்கொள்கின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியில் இருந்த சுமார் 30 கப்பல்களைக் கொண்ட கூட்டணிப் படைகள் ஹூதிகளைக் கட்டுப்படுத்துவதில் சிரமங்களைச் சந்தித்தன; அக்காலத்தில் ஹூதிகளிடம் இருந்த ஆயுத வலிமை, இன்று அவர்களிடம் உள்ளதை விடக் குறைவாகவே இருந்தது. இந்த மோதல்களில் அமெரிக்கா தனது விமானந்தாங்கி கப்பல் மற்றும் பெருமளவான வான் தாக்குதல்களை பயன்படுத்திய போதும், 3 எப்-18 விமானங்களை இழந்ததுடன், மோதலிலும் தோல்வி கண்டிருந்தது.

தற்போது, ஈரானும் சம்பந்தப்பட்டிருக்கும் இமோதலில், அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளை ஒரு பரந்த அளவிலான மோதலுக்குள் இழுத்துச் செல்லக்கூடும்; இது அந்த நீரிணையை மீண்டும் திறக்கச் செய்யும் முயற்சிகளுடன் தொடங்கலாம். தற்போது, மே மாத இறுதியில் இருந்த நிலைக்குப் பிறகு முதல் முறையாக கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 100 டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.




விலை தொடர்ந்து வேகமாக உயரக்கூடும், அதே வேளையில்வழித்தடங்கள்முழுமையாகமூடப்படுவதற்கான அபாயமும் உள்ளது. செங்கடல் மற்றும் ஹார்முஸ் ஆகிய இரு நீரிணைப்புகளும் குறுகிய காலத்திற்கு முடக்கப்படலாம் என்றும், இது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தை உருவாக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, அமெரிக்கா ஈரானையும், ஈரான் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களையும் தொடர்ந்து தாக்கி வருகின்றன. எதிர்கால நடவடிக்கைகளுக்குத் தயாராகும் வகையில் அமெரிக்கத் தாக்குதல்கள் ஈரானின் தற்காப்பு அமைப்புகளை எவ்வாறு பலவீனப்படுத்துகின்றனவோ,அதேபோல ஈரானும் தற்போது பழைய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களைப் பயன்படுத்தி அமெரிக்க இலக்குகளைத் தாக்க முயல்கிறது; அதேவேளையில், அமெரிக்காவின் இடைமறிப்பு ஏவுகணை (interceptor) இருப்பைக் குறைக்கவும் இது வழிவகுக்கிறது.

ஈரானுடன் இடம்பெற்ற மோதல்களில் அமெரிக்கா இதுவரையில் 1,450 இற்கு மேற்பட்ட பற்றியாட் PAC-3 ஏவு கணைகளை பயன்படுத்தியுள்ளது. அதன் இருப்பு கணிசமாகக் குறைந்துள்ள நிலையில் தற்போது பல தசாப்தங்களாகப் பயன்பாட்டில் இல்லாத பழைய PAC-2 இடைமறிப்பு ஏவுகணைகளை அமெரிக்கா இந்த வாரம் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது அந்நாட்டின் இடைமறிப்பு ஏவுகணை இருப்பில் நிலவும் குழப்பமான நிலையை காட்டுகிறது.



இடைமறிப்பு ஏவுகணைகளின் உற்பத்தி மந்தமாக உள்ளது; மேலும், பெரிய அளவில் அவற்றை மறுபகிர்வு செய்யக்கூடிய நிலையில் உலகளாவிய இருப்பு இல்லை. ஆனால், ஈரானிய ஏவுகணைகளின் உற்பத்தி, புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் பணிகள் மிக வேகமான வேகத்தில் நடைபெறுகின்றனவா? என்ற கேள்வியும் உள்ளது. எதிர்கால நிகழ்வுகளைத் தீர்மானிப்பதில் இதுவே மிக முக்கியமான காரணியாக அமைகிறது.

ஆனால், ஈரானியர்களே இதில் முன்னிலையில் உள்ளனர். இடைமறிப்பு நடவடிக்கைகளுக்கு உதவ நேட்டோ (NATO) கப்பல்களைக் கொண்டுவருவதன் மூலம் அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும் இந்த இடைவெளியை ஈடுசெய்ய முயல்வார்கள். இதன் மூலம் சுமார் 200 முதல் 300 வரையிலான கூடுதல் இடைமறிப்பு ஏவுகணைகள் மட்டுமே கிடைக்கப்பெறும்.




இருப்பினும், குறிப்பிட்ட சில பகுதிகளில் ஈரானின் ஆயுதக் கையிருப்பு, இடைமறிப்பு நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து ஒரு பெரும் சவாலாகவே இருக்கும். அதாவது தாக்குதல்களில் இந்த நெருக்கடிகளை சந்திக்கும் அமெரிக்காவால் ஒரு தரை நடைவடிக்கையை ஆரம்பிக்க முடியுமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

அமெரிக்க கூட்டணி படையினர் தரை நடைவடிக்கையை ஆரம்பித்தால் ஈரானும் பதிலுக்கு தரை நடைவடிக்கையை ஆரம்பிக்கும் என்றே கருதப்படுகின்றது. அவ்வாறு ஆரம்பித்தால் குவைத் தான் முதலில் வீழும், இது

தொடர்ச்சி: பக்கம் 15

## சவூதி அரேபியா ... தொடர்ச்சி...

அறிக்கை செறிவூட்டல் குறித்த விவரங்களை வழங்க வில்லை. இந்த அறிக்கைகள் உறுதி செய்யப் பட்டால், இந்த ஒப்பந்தம் வாஷிங்டனில் எதிர்ப்பைச் சந் திக்க வாய்ப்புள்ளது.

ட்ரம்ப், இஸ்ரேலுடன் இணைந்து, ஈரான் யுரேனி யத்தைச் செறிவூட்டுவதையும் அணு ஆயுதத்தைப் பெறு வதையும் தடுப்பதற்காக பிப்ரவரியில் அந்நாட்டின் மீது ஒரு போரைத் தொடங்கினார்; தெஹ்ரான் அத்தகைய முயற்சிகளை மறுக்கிறது. கடந்த ஆண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது குண்டுவீச்சு நடத்தின.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (NPT), யுரேனியம் அணுவின் மிகவும் கதிரியக்கத் தன்மையுள்ள வகையை, அல்லது ஐசோடோப்பை, பிரித்தெடுத்துச் சேகரிக்கும் செயல்முறையான யுரேனியம் செறிவூட்ட லைத் தடை செய்யவில்லை. ஆனால், அதிக அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அணு ஆயுதங்களைத் தயாரிக் கப் பயன்படுத்தலாம்.

இப்பகுதியில் அணு ஆயுதக் கையிருப்பு கொண்டிருப்பதாகக் கருதப்படும் ஒரே நாடு இஸ்ரேல் ஆகும்.

## இந்தியப் போராட்டக்கார 110... தொடர்ச்சி...

இல்லத்திற்கு அருகே திடீர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அவரும் காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டார். காவல்துறையினர் அவரை வலுக்கட் டாயமாக அழைத்துச் சென்றபோது அவரது மூக்கிலிருந்து ரத்தம் வழிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமையன்று, நூற்றுக்கணக்கான இளை ஞர்கள் டெல்லியின் மையப்பகுதியில் உள்ள போராட்டக் களத்தைச் சுற்றி முகாமிட்டிருந்தனர். முன்னதாக, CJP தலைவர்கள் நட்டாவை அவரது இல்லத்தில் சந்திக்க மறுத்துவிட்டனர்; அதற்குப் பதிலாக, அரசின் பிரதிநிதிகள் தங்களை போராட்டக் களத்திலோ அல்லது ஒரு "நடு நிலையான" இடத்திலோ வந்து சந்திக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

## இலங்கையில் கடுமையான ... தொடர்ச்சி...

இன்று கால்நடைகளை வளர்ப்போர் இந்த வெப்பமான சூழ்நிலையில் பாரிய சவால்களை எதிர் கொண்டுவருகின்றனர்.நீர்நிலைகள் வறண்டுள்ளதன் காரணமாக நீண்ட தூரங்கள் தமது கால்நடைகளை கொண்டுசெல்லும் நிலைமையும் காணப்படுகின்றது. இதன்காரணமாக கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக் கப்படும்போது வளர்ந்துவரும் சனத்தொகைக்கும் கால்நடை களின் தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அமைந்திருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலச் செழிப்பு, அதன் நீர்வளப் பராமரிப்பிலேயே தங்கியுள்ளது. மாறிவரும் உலகளாவிய காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர் கொள்ளவும், மாவட்டத்தின் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் குளங்களை விரிவாக்கம் செய்வது ஒரு விருப்பத் தெரிவல்ல அது ஒரு உடனடி அவசியமாகும். நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் உள்ளூர் சமூகங்கள் இணைந்து குளங்களைப் புனரமைத்து விரிவாக் கும் திட்டங்களை விரைந்து முன்னெடுப்பதே மட்டக்களப்பு மாவட்டத்தை ஒரு தற்சார்பு மிக்க, நீர்வளம் மிக்க மண்டலமாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

• • •

## ஐ.நா. பொதுச் செயலாளர்... தொடர்ச்சி...

செயலாளர் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இந்தப் பதவியைப் பெற, 15 உறுப்பினர்களைக் கொண்ட (அதில் ஐந்து பேருக்கு வீட்டோ அதிகாரம் உள்ளது) பாதுகாப்பு சபையின் ஆதரவையும், பின்னர் பொதுச் சபையின் ஒப்புதலையும் இன்ஃபான்டினோ பெற வேண்டி யுள்ளது.

2026 உலகக் கோப்பைப் போட்டியில் ட்ரம்ப் விடுத்த அழைப்பைத் தொடர்ந்து 'ரெட் கார்டு' (red card) முடிவு ரத்து செய்யப்பட்டது தொடர்பான சர்ச்சை யைத் தொடர்ந்து, ஃபிஃபா தலைவர் இன்ஃபான்டி னோவை அப்பதவியிலிருந்து மாற்றுவது குறித்து பரி சீலிக்கப்படுவதாக 'தி கார்டியன்' (The Guardian) ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது.







## படையெடுப்புக்குத் தயா ... தொடர்ச்சி...

மிக விரைவில் நிகழும். சதாம் ஹுசைனைப் போலல்லாமல், ஈரான் குவைத்துடன் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது, மாறாக வளைகுடா ஒத்துழைப்பு மன்றத்தில் உள்ள மற்ற நாடுகளுக்கு எதிரான தனது தாக்குதலைத் தொடரும். பஹ்ரைன், கத்தார், மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், பின்னர் ஓமான், இறுதியாக சவுதி அரேபியா.

இந்த வழியில், ஈரான் ஜோர்டானையும் அழிக்கும். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் வீழ்ச்சி, எரி பொருள் பற்றாக்குறை, பஞ்சம், மற்றும் பெருந்திரளான இடம்பெயர்வு ஆகியவற்றை விட "தோல்வி" என்பதன் அர்த்தத்தை வேறு எதுவும் அவ்வளவு தெளிவாகக் காட்டாது. ட்ரம்பால் "பெரும் ஈரான்" உருவாகுவதை தடுத்து நிறுத்த முடியாது, ஏனெனில் அதற்கு மறுப்பு, மாயைகள் மற்றும் கற்பனைகள் அல்ல, யதார்த்தவாதமும் வரலாற்றைப் பற்றிய புரிதலும் தேவை. ஒட்டுமொத்தமாக, அமெரிக்கா ஒரு தவிர்க்க முடியாத தோல்வியின் விளிம்பில் உள்ளது என மியாமி பல்கலைக்கழகப் பேராசிரியரும் புவிசார் அரசியல் ஆய் வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், ஜோர்டானில் உயிரிழந்த நான்கு ராணுவ வீரர்களின் பெயர்களை, உயிரிழந்தோர் குறித்த அதிகாரப்பூர்வப் பட்டியலிலிருந்து பென்டகன் நீக்கியுள்ளது. "ஏப்ரல் மாதத்தில் அதிபர் டிரம்ப் போரில் போர்நிறுத்தத்தை அறிவித்த பிறகு இவர்களின் மரணங்கள் நிகழ்ந்ததே" இதற்குக் காரணம் என்று அவர்கள் விளக்குகின்றனர். நான்கு பேரின் மரணங்களுக்கே அவர்கள் இவ்வளவு கவலைப்படுகிறார்கள் என்றால், எதிர்காலத்தில் போர் தீவிர மடையும்போது ஏற்படக்கூடிய உயிரிழப்புகளை அவர்கள் எப்படிக் கையாளப் போகிறார்கள் என்பதை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

## கறுப்பு ஜூலை முதல் ... தொடர்ச்சி...

நிர்வாக பிரச்சினைகளுக்கான சுயாதீன தீர்வு முறைமையை உருவாக்குதல், பெருந்தோட்டங்களில் மனித உரிமை கண்காணிப்பு முறைமையை வலுப்படுத்துதல் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் போன்ற விடயங்களில் அரசும் கவனம் செலுத்த வேண்டும்.

கறுப்பு ஜூலை என்பது கடந்த காலத்தின் ஒரு நினைவு மட்டுமல்லாது எதிர்காலத்திற்கான எச்சரிக்கையு மாகும். 1983 ஆம் ஆண்டு தமிழர் என்ற காரணத்திற்காக உயிர்களும் உடைமைகளும் இழக்கப்பட்டன. இன்று மலையக மக்களின் போராட்டம் காணி உரிமை, வாழ் வாதாரம் மற்றும் மனித கண்ணியத்தைப் பாதுகாப்பதற் கானதாக மாறியுள்ளது. பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல - உனுகொல்ல தோட்ட சம்பவமும், இரத்தினபுரி நீலகாமம் சம்பவமும், பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய கேள்விகளாக இருப்பதை நினைவூட்டுகின்றன.

மலையக மக்கள் இந்த நாட்டின் பொருளா தாரத்தை நூற்றாண்டுகளாக தங்கள் உழைப்பால் கட்டி யெழுப்பியவர்கள். அவர்களுக்கு நிரந்தர காணி உரிமை, பாதுகாப்பான வாழ்க்கை, மனித உரிமை மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் என்பன வழங்கப்படுவது ஒரு சலுகை அல்ல. இலங்கை அரசின் அரசியலமைப்புச் சார்ந்த பொறுப்பும், ஜனநாயகத்தின் அடிப்படை கடமையுமாகும். கறுப்பு ஜூலையின் காயங்கள் மீண்டும் எந்த வடிவிலும் மலையக மக்களினதும் தமிழ் மக்களினதும் வாழ்வில் மீள நிகழாதவாறு எதிர்காலத்தை உருவாக்குவதே இன்று அரசுக்கும், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும், சமூகத் திற்கும் முன் நிற்கும் மிகப் பெரிய பொறுப்பாகும்.

## ஐரோப்பாவின் ஜெட் ... தொடர்ச்சி...

அமெரிக்கா, கனடா, இந்தியா, தென் கொரியா, நைஜீரியா மற்றும் குவைத் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஜெட் எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டதால், ஜூன் மாத ஜெட் எரிபொருள் இறக்குமதி செப்டம்பர் 2025-க்குப் பிறகு இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டியது. இந்த முயற்சிகள் இருந்தபோதிலும், வட அமெரிக்கா மற்றும் ஆசியாவை விட ஐரோப்பாவின் தேவை-வழங்கல் சமநிலை இறுக் கமாகவே உள்ளது. பல தசாப்தங்களாக சுத்திகரிப்பு ஆலைகள் மூடப்பட்டதால், இறக்குமதி செய்யப்படும் ஜெட் எரிபொருளை ஐரோப்பா சார்ந்திருக்கும் நிலை அதிகரித் துள்ளது.

எனர்ஜி ஆஸ்பெக்ட்ஸ் என்ற எரிசக்தி ஆலோ சனை நிறுவனத்தின்படி, மூன்றாவது காலாண்டில் ஐரோப்பா ஒரு நாளைக்கு சுமார் 600,000 பீப்பாய்கள் ஜெட் எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்ளக்கூடும், அதே நேரத்தில் அமெரிக்காவும் ஆசிய-பசிபிக் பகுதியும் விநியோக உபரியைப் பராமரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஜூன் மாத தொடக்கத்தில், ஐரோப்பாவின் ஜெட் எரிபொருள் கையிருப்பு சுமார் 38 மில்லியன் பீப்பாய்களாக இருந்தது,இது 30 நாட்களுக்கும் குறைவான தேவையையே குறிக்கிறது. ஒப்பிடுகையில், அமெரிக்காவின் கையிருப்பு 99 மில்லியன் பீப்பாய்களைத் தாண்டியது.

விநியோகத்தை வலுப்படுத்த, ஐரோப்பிய சுத்தி கரிப்பாளர்கள் உற்பத்தியை அதிகரித்து, இறக்குமதி ஆதாரங்களைப் பன்முகப்படுத்தியுள்ளனர்.

## திசைதிருப்பும்... தொடர்ச்சி...

மெத்தனப்போக்கை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

வெறும் அறிக்கைகளுடனும், திசைதிருப்பும் விஜயங்களுடனும் இந்த விவகாரத்தைக் கடந்து செல்லாமல், இலங்கை அரசுக்கு பொருளாதார-அரசியல் அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலமும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அறிக்கையாளர் மற்றும் சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையை அமைப்பதன் மூலமும் மட்டுமே உண்மையான நீதியை சாத்தியப்படுத்த முடியும்.

பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான போராட்டம் என்பது வெறும் இழப்பீட்டுக்கானது அல்ல. அது அவர்களின் இறையாண்மை, மனித கண்ணியம் மற்றும் வரலாற்று உண்மைக்கான போராட்டமாகும். ஆனால் ஐரோப்பிய ஒன்றியம்போன்றசர்வதேசசமூகங்கள்பூசிமெழுகிதங்களது இராஜதந்திர மூலோபாயத்தை நகர்த்த முனைவதானது, தென்னிலங்கை அரசுகளின் பொறுப்புக்கூறலிலிருந்து நழுவிச்செல்லும் போக்கிற்கு துணைபோவதாக மட்டுமே தான் இருக்க முடியும். அவ்விதமான நிலையில் சர்வதேசம் வழங்கப்போகும் நீதி என்ன என்பதை மீளாய்வதற்கு செய்வது தாயகத்தின் அத்தனை தரப்புக்களின் முன்னாலிருக்கும் பெருங்கடமையாகின்றது.

• • •

## இலங்கைக்கு அமெரிக்கா... தொடர்ச்சி...

உருவாக்கவும், அமெரிக்கப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் ட்ரம்ப் வரிகளைப் பயன்படுத்தியுள்ளார். எனினும் தொழிலாளர் விதிகள் போன்ற வர்த்தகம் சாராத பிரச்சினைகளில் மெக்சிக்கோ போன்ற பிற நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் அவர் அவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

அண்மைய நாட்களில் வெள்ளை மாளிகை கனடாவின் இறக்குமதிகளைக் குறிப்பாக வடக்கு எல்லையைக் கடக்கும் பொருட்களுக்கு 50வீத வரி விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணி இனப்படு... தொடர்ச்சி...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முதன் முதலில் தகவல் வழங்கியவர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ. மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை பெற்ற பின்னர் தெரிந்த உண்மை.

யாழ்ப்பாணம் செம்மணியில் மனிதப் புதைகுழி உண்டு என அவர் தெரிவித்ததன் காரணமாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க, 1999,யூன்,16, அன்று அவர் செம்மணிக்கு அழைத்து வரப்பட்டார். அவரால் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் மனித புதைகுழிகள் தென்படவில்லை.

இதனால் சோமரத்ன ராஜபக்ஷவின் தகவல்கள் குறித்த கவனம் பெரிதுபடவில்லை. ஆயினும் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தின் கட்டுமானப் பணியின் பொருட்டு அங்கு 2025,யூன் மாதம் அத்திவாரம் வெட்டப்பட்ட போது, என்புக் கூடுகள் வெளிவந்ததையடுத்து அத்திவாரம் வெட்டும் பணி இடைநிறுத்தப்பட்டு குறித்த விவகாரம் பொலிஸ் ஊடாக நீதிமன்றத்தின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது.

இச்சம்பவம் நடந்த போது, இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமையப்பெற்றிருந்தது. அதன் பின்னர் 2025, யூலை, 21 நீதிமன்றத்தின் உத்தரவில் அங்கு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கான நிதியை அரசாங்கம் ஒதுக்கியிருந்தது.

மேற்படி அகழ்வுப் பணிகளின் ஒருவருடம் எட்டும் போது கடந்த 2026, யூலை,23, வரை 471 என்புத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. மேலும் பல என்புத்தொகுதிகள் உண்டு என அதிர்ச்சியில் நம் மக்கள் உறைந்திருக்கும் வேளையில், செம்மணி பகுதியில் மேலும் சில இடங்களில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக சோமரத்ன ராஜபக்ஷ தற்போது கூறியிருப்பது பேரதிர்ச்சியைத் தருவதாகும்.

இந்த நிலையில் கடந்த 22/07/2026, ல் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் செம்மணி தமிழினப்படுகொலை என்புத்தொகுதிகளை பார்வையிட்டுள்ளனர்.

• • •

## சர்வதேச நீதி பொறிமுறை ... தொடர்ச்சி...

தரவுகளை அறிக்கையிடும் வகையிலேயே அமைகிறது" என்று அவர் தெரிவித்தார்.

"அரசாங்கத்தின் இயந்திரமாக செயற்படும் நீதித்துறையினால் எமது பிரச்சினை களுக்கான தீர்வினை ஒருபோதும் பெற்றுக் கொடுக்க முடியாது. ஒரு முறையான சர்வதேச பொறிமுறை ஊடாகவே எம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான தீர்வு கிடைக்க முடியும்" என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொருளாளர் கண்ணதாசன் சுடரோன் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு நீக்கப்பட்ட GSP+ வரிச் சலுகை மீண்டும் 2017ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதன்போது பயங்கரவாத தடைச் சட்டமானது நீக்கப்பட வேண்டும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கையாக இருந்தது.

ஆனால் இன்று வரை மக்களை அடக்குகின்ற பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளிட்ட விடயங்கள் நீக்கப்படவில்லை. இது இவ்வாறு இருக்கையில், ஐரோப்பிய ஒன்றியத்தினர் இங்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களை சரியாக சந்திக்காமல் செல்வது ஒரு கண்துடைப்பு விடயமாகவே பார்க்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

"நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை கேட்பது யாதெனில், இலங்கை அரசால் நடத்தப்பட்ட அநீதியை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் தட்டிக்கேட்காது. எனவே இதற்கு முறையான ஒரு சர்வதேச பொறிமுறை செயற்படுத்தப்பட வேண்டும்" என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொருளாளர் கண்ணதாசன் சுடரோன் வலியுறுத்தினார்.

## 2026 உலகக் கோப்பை ... தொடர்ச்சி...

எதிர்பார்த்தபடியே, அர்ஜென்டினா (15) மற்றும் எகிப்து (12) அணிகளுக்கே அதிக மஞ்சள் அட்டைகள் வழங்கப்பட்டன. இவர்களது கடைசி 16 சுற்றுப் போட்டியானது, இந்தத் தொடரிலேயே மிகவும் சர்ச்சைக்குரிய, தீவிரமாக ஆராயப்பட்ட, அரசியல் ரீதியாகப் பதற்றம் நிறைந்த மற்றும் சூடான போட்டிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

**அதிக மஞ்சள் அட்டைகள்:**

- அர்ஜென்டினா: 15
- எகிப்து: 12
- கனடா: 11
- பராகுவே: 9
- பிரேசில், இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, கொலம்பியா, ஈக்வடார்: 8
- குராசோ, போர்ச்சுகல், அமெரிக்கா, ஹைட்டி, மொராக்கோ, போஸ்னியா: 7

கத்தார், அர்ஜென்டினா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகள் தலா இரண்டு சிவப்பு அட்டைகளைப் பெற்றன; இதில் முதலாவது சிவப்பு அட்டை, இஸ்மாயில் கோனே மீது அஜாக்கிரதையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு மோதலால் அவருக்குக் கடுமையான காயம் ஏற்படக் காரணமான அசிம் மாடிபோவுக்கு வழங்கப்பட்டது.

நன்றி: அல்ஜசீரா

## கறுப்பு ஜூலை என்பது ... தொடர்ச்சி...

மக்களின் மனதில் ஒரே கேள்வியை எழுப்பின - இந்தத் தீவில் சம உரிமையுடன் வாழ முடியுமா? அந்தக் கேள்விக்கான அரசியல் பதிலாகவே தனித் தமிழீழக் கோரிக்கை மேலும் வலுப்பெற்றது.

நாற்பத்திமூன்று ஆண்டுகள் கடந்தபோதும் கறுப்பு ஜூலையின் காயங்கள் ஆறவில்லை. அந்த வன்முறையின் நினைவுகள் இன்னமும் ஈழத் தமிழ் மக்க ளின் கூட்டு மனச்சாட்சியில் உயிரோடு இருக்கின்றன. இன்று சில சிங்கள மக்களிடையே கடந்த காலத்தைப் புரிந்து கொள்ளும் மனநிலையும் உருவாகி வருகிறபோதும், இனவாத அரசியலை மீண்டும் உயிர்ப்பிக்க முயலும் அரசியல்வாதிகளும் இன்னும் உள்ளனர். அதனால் கறுப்பு ஜூலை என்பது கடந்த கால வரலாறு மட்டுமல்ல; இனவெறி அரசியலின் ஆபத்தை இடையறாது நினைவூட்டும் வரலாற்றுப் பாடமாகவும் தொடர்கிறது.


## செம்மணி புதைகுழி: சிங்க ... தொடர்ச்சி...

இதில் பல்தரப்பு இராஜதந்திர ஈடுபாடு (Multilateral diplomatic engagement) பொது இராஜதந்திரம் (Public diplomacy) மூலோபாய தகவல் தொடர்பு (Strategic communication) சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் (International accountability mechanisms)ஆகியவை முக்கிய இடம் பெற வேண்டும்.

மேலும், சர்வதேச மனித உரிமை விவாதங்களில் புதிய நெறிமுறைகளை உருவாக்கும் வகையில் நெறிமுறை உருவாக்கும் முன்னோடி வகிபங்கு (Norm entrepreneurship -வகிக்க வேண்டிய அவசியமும் உள்ளது.









இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



- ஐ. அதீக் ஷன் -
திருமால் வீதி

## ஆழம் அறியாமல் காலை விடாதே

அனுவும் பிரியாவும் சிறு வயதில் இருந்தே நல்ல தோழிகள். பிரியாவுக்கு துணி வடிவமைப்பில் ரொம்ப ஆர்வம் உடையவள். அவள் வீட்டிலும் அவளுடைய இலக்கிற்கு ஆதரவளித்தார்கள். பிரியா ஒரு சின்ன கடை ஆரம்பித்தாள். முதலில் கஷ்டப்பட்டாலும் கொஞ்சம் கொஞ்சமா கடை முன்னேற ஆரம்பித்தது. இவளுடைய திறமையால் வாடிக்கையாளர்கள் நிறையபேர் வர தொடங்கினார்கள். இணையதளத்திலும் பல வாய்ப்புகள் கிடைத்தது.

பிரியா இவ்வாறு வளர்ச்சியடைந்ததை பார்த்து அனுவிற்கும் இப்படி கடை வைத்தால் நாமும் முன்னேறலாம் என்று நினைத்து , யாரிடமும் ஆலோசிக்காமல் , அது பற்றிய எந்த அறிவும் இல்லாமல் அவசரமாக பக்கத்திலேயே ஒரு துணி கடையை ஆரம்பித்தாள். ஆனால் அவளால் பிரியாவை போல வர முடியவில்லை. அவள் தன்னிடமிருந்த எல்லா பணத்தையும் கடையிற்கு செலவு செய்தும் எந்த இலாபமும் வரவில்லை.

இறுதியாக பிரியாவிடம் சென்று கதைத்தாள்."உனக்கு மட்டும் எப்படி இலாபம் வருகிறது. எனக்கு ஏன் வரவில்லை என" கேட்டாள். அதற்கு பிரியா ," எனக்கு அதன் மீது ஆர்வம் உள்ளது. அதோடு அதைப்பற்றிய தெளிவான விளக்கமும், ஒரு கடையை நடத்துவதற்கான அறிவும் ஆதரவும் இருக்கிறது. ஆகையால் நீ உனக்கு எதன்மீது ஆர்வமும் தெளிவும் உள்ளதோ அதைப்பற்றி ஆராய்ந்து கலந்தாலோசித்து செயற்படு" என்றாள்.
அப்போது தான் அனுவிற்கு புரிந்தது. நாம் ஒன்றை செய்யத்தொடங்கும் முன் அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்த பின்னரே செய்யவேண்டும் என்று. அதேபோல் நாமும் ஒரு விடயத்தை செய்யமுன் ஆராய்ந்து அதன் ஆழம் உணர்ந்தே செய்ய வேண்டும்.

சு.திகழினி
கன்னியா



-இ.ஜோயல் -
செல்வநாயகபுரம்

## "சின்ன சின்ன ஆசை"

*சின்ன சின்ன ஆசை - மீண்டும்*
*சிறுமியாக ஆசை...*

*உலகில் உள்ள அனைத்தும்*
*உண்டு விட ஆசை..*

*மழலை மொழியில் என்றும்*
*மகிழ்ந்திட ஆசை..*

*தொ(ல்)லை பேசி இல்லா வாழ்வில்*
*தொலைந்து விட ஆசை..*

*தாய் மடியில் என்றும்*
*தலை சாய்த்திட ஆசை..*

*கார்குழல் என்றும்*
*கருமையாக ஆசை..*

*இறை தந்த வாழ்வை - என்றும்*
*இன்புற ஆசை...*

ஹப்ஸா க்வில்
பாலையூற்று




# தாயகமும் வாழ்வும்

